# செயலாற்றுகை அறிக்கை – 2018

# தேசிய திட்டமிடல் திணைக்களம்


1. திணைக்களத்தின் தூரநோக்கு, பணிக் கூற்று, தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்

2. திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் துறைகள்

3. துறை வாரியான செயலாற்றுகை

3.1 பேரண்டப்பொருளாதார அபிவிருத்தி

3.2 விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடை மற்றும் மீன்பிடி

3.3 கைத்தொழில்கள் மற்றும் வர்த்தகம், தொழில், சுற்றுலாத்துறை மற்றும் மின்வலு மற்றும் எரிசக்தி

3.4 வீதிகள், துறைமுகங்கள், விமானப்போக்குவரத்து மற்றும் போக்குவரத்து

3.5 நகர அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வளம் மற்றும் சுற்றாடல்

3.6 சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியம், விளையாட்டு மற்றும் கலாசாரம்

3.7 கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி, தகவல் தொழினுட்பம், விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம்

3.8 பிரதேச அபிவிருத்தி மற்றும் சமூக பாதுகாப்பு

3.9 பொது முகாமைத்துவம் மற்றும் ஆட்சி

3.10 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம்

4. தகவல் அபிவிருத்திக்கான மத்திய நிலையம்

5. மனித வள அபிவிருத்தி மற்றும் பொது நிர்வாகம்

6. நிதிச் செயலாற்றுகை

1. **திணைக்களத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்**

**தூரநோக்கு**

நாட்டின் அபிவிருத்தியில் ஆலோசகராகவும் வசதியளிப்பவராகவும் இருத்தல்.

**பணிக்கூற்று**

நாட்டில் காணப்படும் வரையறுக்கப்பட்ட மூலவளங்களினூடாக உச்ச பயனைப் பெறக்கூடிய வகையில் சிறப்பான திட்டமிடல் அணுகுமுறைகளைப் பின்பற்றிக் கொள்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குவதில் உயர்ந்த பட்ச தொழில் வல்லமையைப் பேணும் வகையில் சர்வதேச தரத்திலான திட்டமிடல் திறன்களைத் தொடர்ச்சியாக மேம்படுத்துதல்.

**பிரதான தொழிற்பாடுகள்**

- தேசிய மற்றும் துறை ரீதியான கொள்கைகளை வகுப்பதில் உதவுதல்
- நடுத்தரகால அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் : பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (பொ.மு.நி)
- கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல்
- அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புகளை வழங்குதல்
- துறை ரீதியான அணுகுமுறைகளைக் கட்டியெழுப்புவதில் முன்னோடியாக விளங்குதல்
- கருத்திட்ட இருப்பினைப் பேணல்
- திட்டமிடலுக்கான வழிகாட்டல்களைத் தயாரித்தல்
- பிராந்திய மட்ட அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்
- பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினை முகாமைப்படுத்துவதற்குரிய தொழினுட்ப உதவிகளை வழங்குதல்
- அபிவிருத்திப் பங்காளர் குழுக்களை முகாமை செய்தல்
- விசேட பணிகளை நிறைவேற்றுதல்
- ஊழியர்களின் திறன் அபிவிருத்திச் செயற்பாடுகள்
- பொது நிர்வாகம்

## 2. திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் துறைகள்

திணைக்களத்தின் தொழிற்பாடுகளை மிகவும் சிறப்பாக கொண்டு நடாத்துவதற்காக திணைக்களமானது 10 துறைகளாக பிரிக்கப்பட்டுள்ளதோடு அத்துறைகள் மேலும் 26 உப பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை பொருளாதார அபிவிருத்தியின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளன. ஒவ்வொரு துறையும் அதன் கீழ் காணப்படும் நிரல் அமைச்சுக்கள் தொடர்பான கொள்கை உருவாக்கம், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றிற்கு பொறுப்பாக உள்ளது.

இவற்றிற்கு மேலதிகமாக திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு உறுதுணை புரிவதற்காக பேரண்டப்பொருளாதாரத் திட்டமிடல், தகவல்களை பரிமாற்றம் செய்தல், நிர்வாகம் ஆகியவற்றுடன் தொடர்புடைய மேலும் மூன்று வெவ்வேறான பிரிவுகள் காணப்படுகின்றன.

1. தகவல் அபிவிருத்திக்கான மத்திய நிலையம்
2. நிர்வாகப் பிரிவு
3. நிதிப் பிரிவு

### திணைக்களத்தின் துறைகள்

- பேரண்டப்பொருளாதார அபிவிருத்தி
- விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடை மற்றும் மீன்பிடி
- கைத்தொழில்கள் மற்றும் வர்த்தகம், மின் வலு மற்றும் எரிசக்தித்துறை
- வீதிகள், துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து
- நகர அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் விநியோகம் மற்றும் சுற்றாடல்
- கல்வி, உயர்கல்வி, திறனபிவிருத்தி, தகவல் தொலைத் தொடர்பு, விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம்
- சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியம் விளையாட்டு மற்றும் கலாசாரம்
- பிராந்திய அபிவிருத்தி மற்றும் சமூக பாதுகாப்பு
- பொது முகாமைத்துவம் மற்றும் ஆட்சி
- பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம்

## 3. துறைவாரியான செயலாற்றுகை

### 3.1 பேரண்ட பொருளாதாரத்துறை

பேரண்ட பொருளாதாரப்பிரிவானது தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தக்கூடிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் பிரதிபலிப்பதில் திணைக்களத்தின் ஏனைய துறைகளுக்கு உதவுதலை நோக்காகக் கொண்டுள்ளது. இது தேசிய மற்றும் சர்வதேச சூழலைப் பகுப்பாய்வு செய்து, துறை சார்ந்த உத்திகளைத் தயாரித்தல் மற்றும் துறை சார்ந்த கருத்திட்டங்களை ஆய்வு செய்வதற்காக ஏனைய துறைகளுக்கு உள்ளீடுகளை வழங்குகின்றது.

**முன்னேற்றம்**

- பொது முதலீட்டுத்திட்டம் (பொ.மு.தி) 2017-2020 இற்றைப்படுத்துவதற்கான ஆரம்ப வேலை பூர்த்தி செய்யப்பட்டது.
- நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் ஆண்டறிக்கை 2017இற்கான "நோக்கு 2025உம் பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017-2020இன் முன்னேற்றமும்" எனும் அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.
- பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017-2020இன் முன்னேற்றத்திற்குரிய தேவையான தகவல்களைச் சேகரித்து மத்திய ஆண்டறிக்கை 2017இற்கு வழங்கியமை.
- துறை ரீதியிலானதும் அமைச்சு ரீதியிலானதும் மூலதன பாதீட்டு வரையறை (2019 – 2021) தயாரிக்கப்பட்டது.
- கருத்திட்ட சமர்ப்பிப்பு மாதிரியினை இற்றைப்படுத்துவதற்காக, நிரல் அமைச்சுக்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் கருத்துகள் மற்றும் பார்வைகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான 3 வேலைப்பட்டறைகள் ஒழுங்கமைக்கப்பட்டன.
- அவ்வாறே கருத்திட்ட சமர்ப்பிப்பு மாதிரி இற்றைப்படுத்தப்பட்டது.

### 3.2 விவசாயம், பெருந்தோட்டத்துறை, கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி, காணி மற்றும் நீர்ப்பாசனம்

**விவசாயத்துறை**

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக விவசாயத்துறை முக்கியமாகச் செயற்படுகின்றது, குறிப்பாகப் பொருளாதாரத்தில் ஏனைய துறைகளின் வளர்ச்சிக்கு தொடர்புடைய தொழிற்படைக்கான பங்கினையும் வள ஆதாரத்தினையும் தன்னகத்தே கொண்டுள்ளது. விவசாயத்தின் கொள்கை முனைப்பு ஆனது உச்ச விளைச்சலை நோக்கிச் செல்லுதல்,சிறந்த தொழினுட்பங்கள், சர்வதேசச்சந்தையில் போட்டித்தன்மையை அதிகரிக்கும் அதேவேளை தேசத்தின் உணவுப் பாதுகாப்பினை நிலைபேறானதும் இலாபகரமான சந்தையின் மூலம் உறுதிப்படுத்துதல், சாத்தியமான ஒப்பிடக்கூடிய நன்மைகளை விரிவாக்குதல் ஆகியவற்றின் மூலம் கொள்கை ரீதியிலாக துறையினை நவீன மயப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் பிரதானமானவர்களை நவீனமயப்படுத்தி தரமுயர்த்துவதன் மூலம் பெறுமதிச்சங்கிலிகளை வலுப்படுத்துதல், தரநிலை மேம்பாடும் சிறந்த விவசாய முறைகளும், புதுமையான மற்றும் உகந்த தொழினுட்பங்கள் ஆகியவற்றுடன் உற்பத்திக் காரணிகள் மேம்பாடு, சிறந்த சந்தை வாய்ப்பு மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியன தற்போது முதலிடுவதற்கு முன்னுரிமைப்படுத்தப்பட்ட முக்கியம் வாய்ந்தவையாகும். பாதிப்புக்குரிய நிகழ்வுகளைக்

குறிவைத்து குறிப்பாக விவசாய வளர்ச்சியில் காலநிலை மாற்றங்கள் வறட்சி, வெள்ளம் ஆகியன விவசாயத்துறையின் வளர்ச்சியில் அதிக முக்கியத்துவத்தினை வழங்கின.

**பயிர் விவசாயம்**

பயிர்விவசாய உற்பத்தியில் முதிர்ச்சியை உறுதிப்படுத்தவும் வலுப்படுத்தவும் 2018 ஆம் ஆண்டில் அரசு பல முயற்சிகளை மேற்கொண்டது. பொது முதலீடு முக்கியமாக அதிகரித்த உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மூலம் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதில் கவனம் செலுத்துகின்றது. நெல் உற்பத்தி மற்றும் ஏனைய தெரிவு செய்யப்பட்ட சோளம், மிளகாய்கள், வெங்காயம், பயறு, உழுந்து போன்ற உப பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக 2018ஆம் ஆண்டிலும் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தது. இதற்கு மேலதிகமாக, பழங்கள் மற்றும் வாசனைத்திரவியங்களின் உற்பத்தி அதிகரிப்பை இலக்காகக் கொண்டிருக்கும் பெரியளவிலான பயிர் உற்பத்தி வலயங்களும் ஏற்றுமதிச் சந்தையில் நோக்கமாகக் கொண்டது. சர்வதேசச் சந்தையைக் கைப்பற்றுவதற்கும் உள்நாட்டு நுகர்வோரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் உற்பத்திக்கான உற்பத்தித்தரங்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரோக்கியமான உணவுப் பொருட்களின் உற்பத்தியை நுகர்வோருக்கு உற்பத்தி செய்வதற்காக சிறந்த விவசாய முறைகள் (GAP) அல்லது GAP முறையின் மூலோபாயத்தின் உருவாக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கான பிரச்சினைகளைத் தீர்க்கும் சாத்தியமான உத்திகள், வர்த்தகம், சுகாதார மற்றும் phyto துப்புரவேற்பாடு, தொழினுட்பத் தடைகள் ஆகியவற்றுக்கு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான சூழலில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன. அவ்வாறே, 2018ஆம் ஆண்டில் சுமார் 12 பில்லியன்கள் மூலதன வரவு செலவுத்திட்டங்கள் பயிர் விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் விவசாயத்துறையினால் பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்**

- 17 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களங்களுக்கு நிதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டன.
- விவசாயம். கிராமிய அபிவிருத்தி. கால்நடை அபிவிருத்தி. நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடிகள் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு பின்னர் விவசாய அமைச்சு என்பவற்றால் சமர்ப்பிக்கப்பட்ட 11 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சார்பாக அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

**விசேட செயற்பாடுகள்:**

- தரப்பட்ட நேரத்தில் நெல் / அரிசியின் பங்கு நிலைமையை அறிந்து கொள்ளக்கூடியதாக நெற்பயிருக்கான முகாமைத்துவ தகவல் முறைமையானது (MIS) நிறைவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும் கமத்தொழில் திணைக்களத்தின் "Crop-Look Net" online கணனி நிகழ்நிலை தகவல் தொழினுட்ப முறைமையுடன் MIS முறைமையை ஒன்றாக்க தீர்மானம் எடுக்கப்பட்டது.

- விவசாயத்துறைக்கான அதிகப்படியான கொள்கை உருவாக்கத்திற்காக சகல தொடர்புடைய அக்கறைதாரர்களுடன் ஒன்றாகக் கொள்கை வழிகாட்டல்கள் மற்றும் தொழினுட்ப உள்ளீடுகளை வழங்குவதில் சம்பந்தப்பட்டமை.

- உலக உணவு விவசாய அமைப்பு (FAO) மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP) ஆகியவற்றின் அனுசரணையுடன் விவசாயத் துறைக்கான நிலையான அபிவிருத்தி இலக்குகளை உள்நாட்டுக்கு ஏற்றவகையில் மாற்றுவதற்கான ஆய்வினை தொடர்புடைய நிரல் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்துநிறைவு செய்தமை.

**பெருந்தோட்டத்துறை**

அந்நியச் செலாவணி வருவாய் அடிப்படையில் பொருளாதாரத்தில் இரண்டாவது பெரிய பங்களிப்பவராக இத்துறை இருப்பதனால், இந்நாட்டின் பொருளாதாரம் வெளிநாட்டு வருமானங்களை விரிவுபடுத்துவதற்கும் அதிகரிப்பதற்கும் இத்துறையில் இன்னும் அதிக வாய்ப்புள்ளது. பெருந்தோட்டத்துறை பிரதானமாக தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை ஆகியன காணப்படுவதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இதன் பங்களிப்பு 2% ஆகும். பெருந்தோட்டப்பயிர்கள் 0.9 மில்லியன்கள் ஹெக்டெயர் பரப்பளவில் செய்கை பண்ணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக சீனி, பாம் எண்ணெய், முந்திரிகை ஆகியனவும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை வழங்கும் பிரதான உப பயிர்களாகும். அண்ணளவாக அண்ணளவாக 1 மில்லியன் சனத்தொகையினர் பெருந்தோட்ட நிலங்களில் வாழ்வதுடன் பெருந்தோட்டத் துறையானது நேரடியாகவும் மறைமுகமாகவும் 1.5 மில்லியனிற்கும் அதிகமான மக்களிற்கு வேலைவாய்ப்பினை வழங்குகின்றது. நாட்டின் குறைந்த உற்பத்தித்திறன், உற்பத்தி வேறுபாடு இல்லாமை, தொழிலாளர் பற்றாக்குறை, பாரம்பரியச் சந்தை முறையில் தங்கி இருத்தல் அவ்வாறே தொழினுட்பத் தடைகள் ஆகியவற்றின் காரணமாக துறையின் செயலாற்றுகை பாதிக்கப்பட்டுள்ளது. இப்பின்னணியில், அரசாங்கமானது, பிரதானமாக துறையின் செயற்றிறனை மேம்படுத்துவதன் மூலம் உற்பத்தித்திறன் மற்றும் பன்முகப்படுத்துதல் ஆகியவற்றினை அதிகரிப்பதனை நோக்காகக் கொண்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, இம்மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல் முக்கியமான முன்னுரிமைகளில் ஒன்றாக உள்ளதுடன் பெருந்தோட்டத்துறையில் உள்ள லயன் வீடுகளை ஒரு நிலப்பரப்பின் உரிமையுடன் கூடிய கௌரவமான வீடுகள் வழங்குவதற்காக அரசாங்கம் முதலீடு செய்கின்றது. அதற்கேற்ப, இத்தகைய தலையீடுகளுக்கு அரசாங்கம் சுமார் 8.2 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் பெரிய அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொள்வதுடன் 2018 ஆம் ஆண்டில் 1.2 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பெருந்தோட்டத்துறையினால் பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்**

- 13 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- பெருந்தோட்டத்துறையுடன் தொடர்புடைய 03 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சார்பாக அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

**விசேட செயற்பாடுகள்:**

- பெருந்தோட்டத்துறைக்கான பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (2018-2021) தயாரிக்கப்பட்டது.
- திறைசேரியின் பிரதிச் செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு அமைய தேயிலை மற்றும் இறப்பர் ஆகிய துறைகளினை அபிவிருத்தி செய்வதற்கான

மூலோபாய அறிக்கை அமைச்சரவை உப குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டது.

**கால்நடைத்துறை**

கால்நடைத் துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்திக்குஏறத்தாழ 0.8% பங்களிப்பினை வழங்குவதுடன் நாட்டின் பொருளாதாரத்தில் குறிப்பிடக்கூடிய பங்கினைக் கொண்டிருப்பதுடன் குறிப்பாக கிராமிய வாழ்வாதார அபிவிருத்திக்கு ஏறத்தாழ 20% பங்கு உதவியளிக்கும் அதேவேளை நாட்டின் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துகின்றது. இத்துறை பிரதானமாக பாற்பண்ணை, கோழி வளர்ப்பு, பன்றி மற்றும் ஆடு வளர்ப்பு ஆகிய உப துறைகளைக் கொண்டதாகும்.

கால்நடைத் துறையின் பிரதான துறையான பாற்பண்ணைத்துறையானது2020 ஆம் ஆண்டளவில் பாலில் தன்னிறைவடைதல் எனும் அடைவினைப் பிரதானமாக அடையும் குறிக்கோளாகக் கொண்டதாக அரசாங்க முதலீடு ஒதுக்கத்தினைக் கொண்டுள்ளது. இச்சூழ்நிலையில் அரசாங்கம் பிரதானமாக பாற்பண்ணைத்துறையினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக குறிப்பாக பாற்பண்ணை விலங்குகளை இறக்குமதி செய்தல், செயலாக்க தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல், கால்நடை பராமரிப்பினை முன்னேற்றல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் திறனபிவிருத்தி ஆகியவற்றினை மேம்படுத்துதல் மூலம் கவனம் செலுத்துகின்றது. இவற்றிற்கு மேலதிகமாக கால்நடை உற்பத்திப் பொருட்களைக் கிடைக்கக் கூடியதாகச் செய்தல், விசேடமாக கோழி இறைச்சி மற்றும் முட்டை ஆகியவற்றினை நியாயமான விலையில் கிடைக்கச் செய்தலும் அரசாங்கத்தின் முன்னுரிமைப் படுத்தப்பட்ட கொள்கை ஆகும்.

தற்போது கால்நடைத்துறையானது, உள்நாட்டு தேவைகளுக்கு மட்டுமல்லாமல் வெளிநாட்டுச் சந்தைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய கால்நடை வளர்ப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கான படிப்படியான வேகத்தினைக் கொண்டுள்ளது. கால்நடை வளர்ப்பு அபிவிருத்தித்துறைக் கொள்கைகள் உள்நாட்டு விலங்கு உற்பத்தியின் அளவு அவ்வாறே தரம் ஆகியவற்றினை உயர்த்துவதற்கு கவனம் செலுத்துகின்றன. பண்ணை மேலாண்மை அமைப்புகளில் நவீன தொழினுட்பத்தினை ஆராய்தல், பண்ணை நடவடிக்கைகளில் தனியார் துறை பங்களிப்பை ஊக்குவித்தல் மற்றும் பாரம்பரிய விவசாய முறைமையை விரிவுபடுத்துவதன் மூலம் சமூகத்திற்கான வேலை வாய்ப்பு வழங்குவது ஆகியவை சில முன்னுரிமை முதலீடுகள் ஆகும்.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கால்நடைத் துறையினால் பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்**

- 04 கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் என்பவற்றுக்கு வழங்கியமை.

- தொடர்புடைய அமைச்சினால் குறிப்பாக கால்நடை அபிவிருத்தியினை ஊக்குவிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 03 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் மற்றும் கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

**விசேட நடவடிக்கைகள்:**

- கால்நடைத்துறைக்கான கருத்திட்ட இருப்பு 2019-2021 நடுத்தர காலச் சட்டகம் இற்றைப்படுத்தப்பட்டது.

- ‘‘கால்நடைகளை இறக்குமதி செய்தல்’’ எனும் கருத்திட்டத்திற்குரிய வழிகாட்டல் குழுக் கூட்டங்களில் பங்கு பற்றியமை.

- இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையில் கால்நடை மற்றும் கோழிப்பண்ணைக்குரிய தேசிய குழுக் கூட்டங்களில் பங்கு பற்றியமை.

- கால்நடைப் பிரிவுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களிற்கான ‘‘விவசாயப் பிரிவிற்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்ளூர் மயப்படுத்தல்’’ எனும் தலைப்பிலான செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டது.

- நடைமுறையில் இருக்கும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினை மீள்பார்வை செய்வதற்கான கூட்டங்களில் பங்கு பற்றியமை.

**மீன்பிடித்துறை**

மீன்பிடித்துறையானது 2.6 மில்லியனுக்கும் அதிகமானோருக்கு வாழ்வாதாரத்தை வழங்கும் அதேவேளை மக்களது உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய வகிபங்கைக் கொண்டுள்ளது. இத்துறையானது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மிகப்பெரிய விரிவாக்கத்தை வழங்கக்கூடிய சாத்தியக்கூறைக் கொண்டுள்ள ஒரு பெரிய துறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த மீன் உற்பத்தி 527,060 மெற்றிக் தொன்கள் ஆக பதிவாகி இருப்பதுடன், இதில் கரையோர மீன்பிடி ஏறத்தாழ 84 சதவீதமாக உள்ளபோது, உள்ளூர் உற்பத்தி 14 சதவீதமாகவும், நன்னீர் மீன் உற்பத்தி 2 சதவீதமாகவும் உள்ளது. சமூகத்தின் வருடாந்த விலங்குப் புரதத் தேவையின் அரைப்பகுதி மீன் மற்றும் மீன் தொடர்பான உணவுப் பொருட்களிலிருந்து பெறப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தலா மீன் நுகர்வு வருடத்திற்கு 17 கி.கிராம் ஆக இருக்கும் அதேவேளை, இது வருடத்திற்கு 22 கி.கிராம் ஆக அடுத்துவரும் வருடங்களில் அதிகரிக்கப்பட வேண்டும் என இலக்கையும் கொண்டுள்ளது.

2018ஆம் ஆண்டில் இத்துறைக்கான பொது முதலீடு பிரதானமாகத் துறைமுகங்கள், நங்கூரங்கள், இறங்கு துறைகள் உள்ளடங்கலாக மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், நவீன தொழினுட்பங்களை அறிமுகம் செய்தல், உள்ளூர் உற்பத்தி, நன்னீர் மீன் உற்பத்திகளை அதிகரித்தல், ஆய்வு மற்றும் அபிவிருத்தி மற்றும் மீன்பிடிச் சமூகத்தினை வலுவூட்டி முன்னேற்றுதல் ஆகியவற்றில் முதலிடப்பட்டது. மேலும், மீன்பிடிச் சமூகத்தினரை இலக்காகக் கொண்ட நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் 2018ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மீன்பிடித்துறையினால் பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்**

- 20 கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் என்பவற்றுக்கு வழங்கியமை.

- மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 03 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சார்பாக அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

**விசேட நடவடிக்கைகள்:**

- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இலக்கம் - 14 ''கடல் சார்ந்த மற்றும் கடலோரச் சுற்றுச் சூழலை நிலையாக நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தல் மூலம் குறிப்பிடத்தக்க பாதகமான விளைவுகளை தவிர்த்தல்'' இற்கான உபாயங்கள், தேசிய குறிகாட்டிகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகளுடன் தொடர்புடைய அடைவுகள் என்பவற்றை உள்ளடக்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டது.

- இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையில் நடைபெற்ற நீரியல் வளங்களிற்கான தேசிய குழுக் கூட்டத்தில் பங்கு பற்றியமை.

- இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையின் கீழ் உள்ள மீன்வளர்ப்பிற்கான தேசிய குழுவினால் ''உலக மீன்வளர்ப்பின் போக்கு'' எனும் தலைப்பிலான செயலமர்வில் பங்கு பற்றியதுடன் உள்ளீடுகளும் வழங்கப்பட்டன.

- மீன்பிடித்துறையுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களிற்கான ''விவசாயப் பிரிவிற்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்ளூர் மயப்படுத்தல்'' எனும் தலைப்பிலான செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டது.

- புதிய மீன்பிடியியல் மற்றும் மீன் வளர்ப்புக் கொள்கைக்கான செயலமர்வில் பங்கு பற்றியதுடன் உள்ளீடுகளும் வழங்கப்பட்டன.

- மீன்பிடித்துறைத்துறைக்கான கருத்திட்ட இருப்பு 2019-2021 நடுத்தர காலச் சட்டகம் இற்றைப்படுத்தப்பட்டது.

- மீன்பிடித்துறையினை அபிவிருத்தி அடையச் செய்வதற்காக நடைமுறையில் இருக்கும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினை மீள்பார்வை செய்வதற்கான கூட்டத்தில் பங்கு பற்றியமை.

**நீர்ப்பாசனம் மற்றும் காணித்துறை**

நீர்ப்பாசனத்துறைக்கான 2018ஆம் ஆண்டிற்குரிய மொத்த செலவினம் சுமார் 68.92 ரூபாய் பில்லியன்களாகும். அவற்றுள் 61.94 ரூபாய் பில்லியன்கள் மூலதன செலவினமாகும். புதிய நீர்வள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாரியளவிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களான மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம், யான் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம், களு கங்கை நீர்த்தேக்கக் கருத்திட்டம், உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டம், காலநிலை அவதானிப்பு முன்னேற்ற கருத்திட்டம் (CRIP), அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர்வள அபிவிருத்திச் செயற்பாட்டு கருத்திட்டம் என்பனவற்றின் பணிகள் தொடரப்பட்டன. அத்துடன் பல்வேறு புனர்நிர்மாண கருத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு விவசாயம் மற்றும் ஏனைய தேவைகளுக்கான நீர் விநியோகிக்கப்பட்டது.

காணித்துறை மீதான 2018ஆம் ஆண்டிற்குரிய மொத்தச் செலவினம் சுமார் 9,158 ரூபாய் மில்லியன்களாகும். அவற்றுள் 3,235 ரூபாய் மில்லியன்கள் மூலதன செலவினமாகும். அவற்றுள் கணிசமான அளவு காணி உரிமை (பிம் சவிய) நிகழ்ச்சித்திட்டத்திற்காகவும் 2018ஆம் ஆண்டில் குறிப்பிடும்படியான அளவில் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2018ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அரச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக நிலங்கள் இனங்காணப்பட்டு சுவீகரிக்கப்பட்டன.

**நீர்ப்பாசனத்துறையில் விசேட ஈடுபாடுகள்**

- நடைமுறையிலிலுள்ள மற்றும் பிரதான கிராமிய அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் பிரதான கருத்திட்டங்கள் ஆகியவற்றிற்கான மூலதன வரவு செலவுத்திட்டத்திற்குரிய இட ஒதுக்கீடு ஆய்வு செய்யப்பட்டு வரைபடமாக்கப்பட்டது.

- சிறுகுளங்கள் மற்றும் அணைக்கட்டுக்கள் புனரமைத்தலை விரைவுபடுத்துவதற்கும் ஏற்கனவே உள்ள பெறுகை முறைத் தாமதங்களைத் தவிர்ப்பதற்குமான பொறிமுறை ஒன்று தயாரிக்கப்பட்டது.

- வெள்ளக்குறைப்பு, அனர்த்தத் தடுப்பு மற்றும் நீர்வள அபிவிருத்தி (2019 – 2024) ஆகியவற்றிற்கான கருத்திட்ட இருப்புக்கள் கையேடு தயாரிக்கப்பட்டது.

- நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் கருத்திட்ட பணிப்பாளர்கள், சிரேட்ட அதிகாரிகள் ஆகியவர்களுக்கு கருத்திட்ட திட்டமிடல் செயற்பாடுகளுக்கான விழிப்புணர்வு நடாத்தப்பட்டது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நீர்ப்பாசனத்துறையினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்**

- 10 நீர்ப்பாசனக்கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் 01 காணித்துறைக்கான கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் ஆகியவற்றிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

- நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சுமற்றும் காணிகள் மற்றும் பாராளுமன்றச் மறு சீரமைப்புக்கள் அமைச்சு ஆகியவற்றிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட 16 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டன.

- மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்க அபிவிருத்தி கருத்திட்டம், அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர்வள முகாமைத்துவக் கருத்திட்டம், மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம், யான் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம் மற்றும் தல்பிட்டிகல நீர்வள முகாமைத்துவக் கருத்திட்டம் ஆகியவற்றிற்கான வழிகாட்டல் குழுக் கூட்டங்களில் பங்குபற்றியமை.

- நடைமுறையில் இருக்கும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினையும் கொள்கையையும் மீள்பார்வை செய்வதற்கான கூட்டங்களில் பங்கு பற்றியமை.

- நீர்ப்பாசனம் மற்றும் காணித்துறையுடன் தொடர்புடைய தகவல்களை வழங்குவதன் மூலம் பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (2017-2020) இற்றைப்படுத்தப்படுவதற்கு உதவியமை.

- ஒருங்கிணைந்த நீர் வழங்கல் மற்றும் நீரியல் வள முகாமைத்துவத்திட்டத்திற்கான கருத்திட்ட அமுல்படுத்தும் திட்டத்திற்கான வரைபு தயாரிப்பதற்கு தொழினுட்ப உதவி நிரல் அமைச்சு, உரிய அக்கறைதாரர்கள் மற்றும் உலக வங்கி ஆகியவற்றுடன் இணைந்து வழங்கியமை.

## 3.3 கைத்தொழில்கள், வர்த்தகம், தொழில், சுற்றுலாத்துறை, மின்வலு மற்றும் எரிசக்தி வளத்துறை

### கைத்தொழில், வர்த்தகம் மற்றும் முதலீடு

நாட்டில் பொருளாதாரத்தின் நம்பகமான உந்து சக்திகள் கவனம் செலுத்துவதால், கைத்தொழில்கள், வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறைகள் முக்கிய பங்கு வகிக்கின்றது. தேசிய திட்டமிடல் திணைக்களமானது தொழிற்சாலைகள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் (SMEs), அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகள் (SOEs), சர்வதேச வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு ஆகியவற்றை வலுவூட்டுவதற்கு தேவையான கொள்கை ரீதியிலான உள்ளீடுகளை வழங்குகின்றது. மேலும், துறையின் நிதியிடலுக்கு தலையிடும் பொழுது துறையுடன் தொடர்புடைய கருத்திட்ட முன்மொழிவுகளுக்காக முன் மதிப்பீட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடலாம். நாட்டின் இனங்காணப்பட்ட தேவைகளுக்காக 2018இல் கீழ்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டன.

- 150 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு சிபார்சுகள் வரவு செலவுத்திட்டத் திணைக்களம் வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் ஏனைய உரிய நிரல் நிறுவனங்கள் ஆகியவற்றிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 05 அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

- கைத்தொழிற்றுறையின் பொருத்தமான தகவல்களை வழங்குவதன் மூலம் பொது முதலீட்டுத்திட்டம் 2018-2021 இற்றைப்படுத்துவதற்கு உதவிபுரிந்தமை.

- பொருளாதார நடை அபிவிருத்தி (Economic Corridor Development) தொடர்பான ஆய்வு விடயங்களுக்கு தொழினுட்ப உதவியும் வழங்கப்பட்டதுடன் பயிற்சிப் பட்டறையொன்று ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து உயர்மட்ட அதிகாரிகளுக்கு அதன் இறுதி அறிக்கையினை விளக்கமளிக்கும் சகல அக்கறைதாரர்களின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்டது.

- தூர நோக்கு 2025 கொள்கை ஆவணத்தின் வழிகாட்டலில் அமுல்படுத்துவதற்கான கொள்கை உள்ளீடுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

- தேசிய ஏற்றுமதி மூலோபாயத்தினை தயாரிப்பதில் உயிர்ப்புடன் பங்கு பற்றியமை.

- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 2030 நிகழ்ச்சித்திட்டத்திற்கான துறை ரீதியிலான உள்ளீடுகள் வழங்கியமை.

### தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் கொள்கையானது பிரதேசத்திலும் வெளிநாடுகளிலும் பணிபுரியும் ஊழியர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் மற்றும் பொருளாதார அபிவிருத்தியினை அடைவதற்கு முக்கியமான ஆரோக்கியமான கைத்தொழில் உறவுகளை மேம்படுத்தலையும் நோக்காகக் கொண்டுள்ளது. இந்நிலைமையில், நடைமுறையில் உள்ள சட்டங்களையும் ஒழுங்குகளையும் செயற்படுத்தும் போது வளர்ந்து வரும் நிலைமையினை அடைந்து கொள்வதற்கு ஏற்ப தேவையான சகல சீர்திருத்தங்களை மேற்கொள்வதுடன் அவை யாவும் சர்வதேசத்தின் சிறந்த நடைமுறையுடன் ஒத்துப் போகக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இனங்காணப்பட்ட இத்தேவையினை அடைவதற்கு 2018 ஆம் ஆண்டில் கீழ்வரும் பணிகளை நிறைவேற்றியுள்ளது.

- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 10 கருத்திட்ட முன் மொழிவுகள் மதிப்பிடப்பட்டு சிபார்சுகள் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

**சுற்றுலாத்துறை**

சுற்றுலாத்துறையானது மிகவும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட கைத்தொழிற்றுறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இது இன்றும் இலங்கைப் பொருளாதாரத்தின் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரதான துறையாகத் திகழ்வதுடன் 2017 ஆம் ஆண்டில் அண்ணளவாக 2.1 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இந்நாட்டிற்கு வருகை தந்துள்ளதுடன் 3,925 ஐ.அ.டொ இனை இலங்கைப் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது.புதிய சுற்றுலா மூலோபாயத்திட்டம் 2017-2018ஆனது சுற்றுலா நோக்கு 2025 இனை அடைந்து கொள்வதற்காக வசதியளிப்பதற்கும் சுற்றுலாத்துறைக்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உதவி புரிவதற்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய சுற்றுலா மூலோபாயத் திட்டத்திற்கமைவாக இலங்கையின் இயற்கை மற்றும் பண்பாட்டு பாரம்பரியத்தினை பிரதிபலிக்கும் வகையில் இலங்கையைத் தாபிப்பதற்கும் அதேவேளை தொழில்சார் சமூகத்துடன் உள்ளடங்கிய மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புகளை ஏற்படுத்துவதோடு தனியார் துறையினை ஊக்குவிப்பதற்கும் புதிய சந்தைகளிலிருந்து சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கவும் மற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் அதிகமான தேவைகளைக் கொண்ட புதிய தயாரிப்புக்களை வழங்கவும் அரசாங்கமானது சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது. மேலும், அரசாங்கக் கொள்கைகள் அரச தனியார் கூட்டுப் பங்குடமைக் கருத்திட்டங்களின் மூலம் தனியார் துறையுடன் மேலும் சுற்றுலா அம்சங்களையும் சுற்றுச்சூழல் உட்கட்டமைப்பையும் மேம்படுத்துவதற்கு கவனம் செலுத்துகின்றன. அரசாங்கமானது நாட்டின் பல பிரதேசங்களில் இனங்காணப்பட்டுள்ள தளங்களாகப் பிரபலமான சுற்றுலாத்தளமாகத் திகழ்ந்து வரும் தெத்துவ சுற்றுச்சூழல் சுற்றுலாப் பகுதி மற்றும் கலாசார முக்கோண சுற்றுலா விரிவாக்கல் திட்டம், கொழும்பின் கோட்டை, காலி மற்றும் மாத்தறை ஆகியவற்றில் உள்ள பாரம்பரியக் கட்டிடங்கள், கொக்கல மற்றும் மாத்தறை ஆகியவற்றில் உள்ள குழிப்பந்தாட்ட (golf) கற்கை நெறிகள் மற்றும் கொக்கல கடல் விமான அருங்காட்சியகம் ஆகியன காணப்படுவதுடன் சாத்தியமான கருத்திட்டங்களைக் கொண்டுள்ளன. போகாம்பர கலாசார மற்றும் சுற்றுலா மையம் மற்றும் மாத்தறை சுற்றுலா வலய அபிவிருத்தி போன்ற கருத்திட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. உயர்செலவுத்திறனுடன் கூடிய பாரிய அளவிலான சுற்றுலாப்பயணிகளின் வருகையினை அடைந்து கொள்வதற்கு இது மிகவும் உறுதியானது.

இதற்கு மேலதிகமாக, சுற்றுலாத்துறையில் காணப்படும் பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக சுற்றுலாவுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை (பிரபலமான மற்றும் பிரபலமற்ற இடங்களுக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி) மேற்கொள்வதற்கும் 10,000 தேசிய தொழிற்பயிற்சி தகைமை மட்டத் திறனுடைய தொழிலாளர்கள் பயிற்சியளிக்கப்படுவதுடன் சுற்றுலாவுடன் தொடர்புடைய சிறியளவிலான கைத்தொழில் முயற்சிகளுக்கும் நிறுவன வளர்ச்சிக்கும் உதவியளிப்பதுடன் நிலைபேறான சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

**விசேட நடவடிக்கைகள்**

- நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 06 கருத்திட்ட முன் மொழிவுகள் மதிப்பிடப்பட்டதுடன் 02 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.

- பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் இற்றைப்படுத்தப்பட்டது.

- தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய நிரல் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

- உலக வங்கியின் நிலைபேறான சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**மின்வலு மற்றும் எரிசக்தித் துறை**

இலங்கையின் மின்வலு மற்றும் எரிசக்தித்துறையானது, பொருளாதாரம் முழுவதிலும் உள்ள அனைத்துத்துறைகளிலும் பல்வேறான விளைவுகளை ஏற்படுத்துவதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஒரு முக்கிய அங்கமாக உள்ளதுடன் அது இறுதியில் மக்களின் நலனுக்கே பங்களிப்பினைச் செய்கின்றது. நிலையான பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்த, தரம், நம்பகரமான மற்றும் போதுமான உட்கட்டமைப்பு மேம்பாடு அவசியம் அத்துடன் மின்வலு மற்றும் எரிசக்தித்துறையானது அபிவிருத்தி மிகவும் தேவைப்படும் துறைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. தற்பொழுது, பாரம்பரிய மூலங்களான நிலக்கரி, இயற்கை எரிவாயு, நீர் மற்றும் எண்ணெய் போன்றவற்றிலிருந்து பாரம்பரியமற்ற மூலங்களான சூரிய சக்தி, காற்று, கடல் அலை, புவிவெப்பம் மற்றும் உயிரி போன்றவை வரை சக்தி உற்பத்தி மூலங்கள் உள்ளன. மின்வலு மற்றும் எரிசக்தித்துறைக்கான தேவை வேகமாக அதிகரித்து வருவதனால் காபன் நடுநிலைச் சக்தித்துறையின் நோக்கங்களை மீறாமல் இலங்கையின் மின்வலு மற்றும் எரிசக்தித்துறையில் மேலதிகமான திறனினை நிறுவும் செயற்பாடு நடைமுறையில் உள்ளது. 2018 ஆம் ஆண்டு முழுவதிலும் இத்துறையின் இக்குறிக்கோள்களை நிறைவேற்ற அரசாங்கம் அதன் மகத்தான உதவியினை விரிவாக்கியுள்ளதுடன் தேசிய திட்டமிடல் திணைக்களமானது 2018இல் பின்வரும் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் அவற்றில் சிலவற்றினை நிறைவேற்றுவதற்கு உதவியுள்ளது.

- 12 கருத்திட்ட முன் மொழிவுகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மீளாய்வு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.

- 05 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.

- வெளிநாட்டுக் குழுக்களுடன் தொடர்புடைய விடயங்களுக்கான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.

- இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான குறுக்கு எல்லையில் மின்சார வர்த்தக வேலைப்பட்டறையினை நடாத்துவதற்கு உதவியமை.

- இயற்கை வாயுவின் தேசியக் கொள்கைத் தயாரிப்பில் தேவையான தொழினுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

## 3.4 போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து

### போக்குவரத்து

போக்குவரத்துத்துறையானது, நகர்ப்புற கிராமப்புற இணைப்புக்களை மேம்படுத்துதல், நகர்ப்புற போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல் மற்றும் வீதி விபத்துக்களைக் குறைத்தல் ஆகியவற்றினை மேம்படுத்துவதன் மூலம் பொதுப் போக்குவரத்தை மேம்படுத்துவதன் ஊடாக நாட்டின் போக்குவரத்துக்கட்டமைப்பின் வினைத்திறனை அதிகரிப்பதனை நோக்காகக் கொண்டுள்ளது. இது சம்பந்தமாக, நடுத்தர காலப்பகுதியில் முதலீடு செய்வதற்கு முன்னுரிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக, புகையிரத வலையமைப்பை அபிவிருத்தி செய்தல், கொழும்பின் நகரசுற்றுப்பகுதியில் புகையிரத வலையமைப்பின் வினைத்திறனை அதிகரித்தல், புகையிரத இயந்திரப்பகுதிகளை விரிவாக்கல், கொழும்பை அண்டிய புறநகர்ப்பகுதிகளில் இலகு புகையிரத கட்டமைப்பினை கொழும்பிலும் அதனை அண்டிய நகரப்பகுதிகளிலும் அபிவிருத்தி செய்தல் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவையின் விரிவாக்குதல் ஆகியன காணப்படுகின்றன.

### நெடுஞ்சாலைகள்

வீதித்துறைக்கு 2018 ஆம் ஆண்டு வழமை போல மிகவும் நெருக்கடியான காலப்பகுதியாகக் காணப்பட்டது. அவற்றுள் சில நடவடிக்கைகளாக அதிவேகப்பாதை அபிவிருத்தி, வீதிகளை அகலமாக்குதல் மற்றும் புனரமைப்பு, வீதிகளைப்பராமரித்தல் மற்றும் பாலங்கள் நிர்மாணம் ஆகியன காணப்பட்டன. தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஆகிய இரு நிதி வளங்களைப் பெறும் வகையில் பாரிய அளவிலான புதிய கருத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இம்முன்மொழிவுகளின் எண்ணக்கருக்கள் சாத்திய வள ஆய்வு முதல் வீதிப்புனரமைப்பு வரை ஆக இருந்தன. அவற்றுள் சாத்திய வள ஆய்வு, பாலங்கள் மீள் நிர்மாணம் மற்றும் அகலமாக்குதல், புதிய வீதி நிர்மாணங்கள், வீதித்துறை முகவர்களுக்கான திறனபிவிருத்தி, அதிவேகப்பாதை அபிவிருத்தி ஆகியன மதிப்பிடப்பட்டன. வீதிகள் வழியே பொதுவான பயன்பாட்டு ஓரமான பாதைகள் நிர்மாணிப்பதற்கான திட்டமொன்று விருத்தி செய்யப்பட்டது. துறையானது எண்ணக்கருவினை மேம்படுத்துவதற்கும் அமுல்படுத்தும் நிலையிலுள்ளதனை கருதுவதற்கும் பெறுமதி மிக்க கருத்துக்கள் வழங்கப்பட்டன.

### துறைமுகங்கள்

இலங்கையானது உலகில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடற்பகுதியில் அமைந்துள்ளதினால் பொதுவாக இலங்கையின் சர்வதேசத் துறைமுகங்களானது சரக்குகளைக் கையாளுவதில் மும்முரமாக இருக்கின்றன. கடல்வழி இயக்கங்களின் அதிகரிக்கும் கேள்விகளை நிறைவேற்றும் வகையில் இவ்வாண்டுக் காலப்பகுதியில் துறைமுகங்களுக்கான அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளும் சேவைகளும் தொடர்ந்தன. ஆண்டின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாக "தேசிய துறைமுகங்கள் மற்றும் கடல் சார்புக் கொள்கை" தயாரிக்கப்பட்டது. துறையின் உறுப்பினர்கள் குழுக்கூட்டங்களில் உயிர்ப்புடன் பங்குபற்றியதுடன் அக்கொள்கை வெற்றியளிப்பதற்குரிய பெறுமதி மிக்க பங்களிப்பும் வழங்கப்பட்டது.

### விமானப் போக்குவரத்து

இத்துறையின் நோக்கங்களாக உலகின் ஏனைய நாடுகளுடன் வலுவான விமானப் போக்குவரத்து வலையமைப்பினை தாபிப்பதுடன் விசேடமாக சுற்றுலா மற்றும் சர்வதேச வர்த்தகம் ஆகிய துறைகளுக்குரிய சிறந்த விமானப் போக்குவரத்து சேவையினை வழங்குவதும் காணப்படுகின்றன. பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வசதிகளை விரிவாக்குவதுடன் புதிய ஆகாய வழிச் சேவைகளை வழங்குவதற்கும் திட்டமிட்டுள்ளது.

**முக்கிய நிகழ்வுகள்**

- உரிய நிரல் அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 28 புதிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- வீதி, போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைக்கான கருத்திட்ட இருப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

- தொடர்புடைய கொள்கைகள் மற்றும் உபாயங்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்கு உரிய அமைச்சுக்களிற்கு தொழினுட்ப உள்ளீடுகள் வழங்கப்பட்டன.
    - பின்வரும் குழுக்களுக்கு பங்களிப்புடன் பங்குபற்றியமை
        - தேசிய துறைமுகம் மற்றும் கடல் சார் கொள்கை, தேசிய வீதிக் கொள்கை மற்றும் தேசிய போக்குவரத்துக் கொள்கை ஆகியன மேம்படுத்தப்பட்டன.
        - இலகு புகையிரத போக்குவரத்து அமைப்பிற்கான இயக்குவதற்கும் பராமரிப்பதற்குமான பொறிமுறை தயாரிக்கப்பட்டது.
        - முன்னுரிமைப்பாதைக்கருத்திட்டம், தெற்கு அதிவேகப் பாதை நீடிப்பு, இரத்தினபுரிக்கான (ருவன் புர) அதிவேகப் பாதைக் கருத்திட்டம், ஒன்றிணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்,இலகு புகையிரத சேவைகளை அறிமுகம் செய்யும் கருத்திட்டம் மற்றும் கொழும்பு புற நகர் புகையிரத சேவைக் கருத்திட்டம் ஆகியவற்றிற்கான கருத்திட்ட வழிகாட்டல் குழுக்களில் பங்களிப்புடன் பங்குபற்றியமை.

- 13 Aide Memoires அபிவிருத்தித் திட்டங்களுக்கான கருத்துகளை தயாரித்து வெளிநாட்டு வள திணைக்களத்திற்கு வழங்கியமை.
- துறைகளுடன் தொடர்புபட்ட தற்காலப் பிரச்சினைகள் ஆராயப்பட்டன.
- வீதி அபிவிருத்தி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு, போக்குவரத்து மற்றும் விமான சேவை அமைச்சு, துறைமுகம் மற்றும் கப்பற்றுறை அமைச்சு அல்லது ஏனைய அமைச்சுக்கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட பாதை மற்றும் போக்குவரத்து தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன. 04 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- செயற்குழு கூட்டங்கள், முன்னேற்ற மீளாய்வுக்கூட்டங்கள் மற்றும் வெளிநாட்டு தூதுக்குழுக்கள் உள்ளடங்கலாக சுமார் 60 செயலமர்வுக்கூட்டங்களில் பங்குபற்றியுள்ளமை.

## 3.5 நகர அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வளம் மற்றும் சுற்றாடல்

### நகர அபிவிருத்தித் துறை

நகர அபிவிருத்தித் துறையானது பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சுடன் மிகவும் நெருக்கமாகச் செயற்பட்டு கொள்கை மற்றும் உபாய வழிகாட்டல்கள் என்பவற்றை வழங்கி இலங்கையில் எதிர்பாரா நகரமயமாகல் அபிவிருத்தி அனுபவத்தையும் கொண்டுள்ளது.துறையுடன் தொடர்புபட்டுக் காணப்படும் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு துறை சார்ந்த மூலோபாய வழிகாட்டல்கள் இனங்காணப்பட்டிருப்பதுடன் நிலையான அபிவிருத்தி இலக்குகள் இல.11 இன் கீழ் அடையாளம் காணப்பட்ட வலுவான, பாதுகாப்பான மற்றும் நிலையான நகரங்களை உருவாக்கும் இலக்குகளில் கவனம் செலுத்தப்படுகின்றன.

### நடவடிக்கைகள்

- 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இத்துறையினால் நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சிற்கு 11 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு 01 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கும் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

- நகர அபிவிருத்தி மற்றும் நகரத் திட்டமிடல் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட 335 கருத்திட்ட முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் 266 கருத்திட்ட முன்மொழிவுகள் ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனையவை பல்வேறு விடயங்களின் பொருட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- எதிர் காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள முன்மொழியப்பட்ட கருத்திட்டங்களிற்கான கருத்திட்ட இருப்பு புத்தாக்கம் செய்யப்பட்டது.

- நகர அபிவிருத்தித் துறையின் முன்னுரிமைப்படுத்தப்பட்ட புதிய கருத்திட்டங்கள்2019 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்காக 2019 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் தயாரிப்பில் பங்களிப்பு செய்யப்பட்டது.

### கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் கொள்கைகளிற்கான உரையாடல்கள் ஆகியவற்றில் பங்கு பற்றல்

- நிரல் அமைச்சுக்களுடனும் மற்றைய உரிய அரசாங்க நிறுவனங்களுடனும் அவற்றினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன் மொழிவுகள் பற்றி கலந்துரையாடுவதற்காக 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### வீடமைப்பு மற்றும் நிர்மாணம்

இப்பிரிவின் தொழிற்படு பரப்பானது பிரதானமாக வீடமைப்பு மற்றும் நிர்மாணமத்துறைகளை உள்ளடக்கியுள்ளது. இத் தொழிற்பாடுகளை தேசிய திட்டமிடல் திணைக்களமானது வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து செயற்பட்டது.

அரசாங்கத்தினால் வரையறுக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு வீடமைப்பு மற்றும் நிர்மாணமத்துறையானது பல்வேறுபட்ட வகிபங்குகளை ஆற்றுகின்றது. அரசாங்கத்தின் கொள்கையானது பிரதானமாக சமூகத்தில் நலிவுற்றோரான கிராமிய வறியவர்கள், பெருந்தோட்ட சமூகம், நகர மற்றும் நகரமயமாகி வரும் பிரதேசங்களில் வாழும் சேரிக்

குடிகள் மற்றும் மோதல்களினால் பாதிக்கப்பட்டோரின் இருப்பிடத்திற்கான தேவையினை நேரடியாக பண உதவி மற்றும் கட்டிடப் பொருட்களைப் பெற்றுக் கொடுத்தல், சலுகை அடிப்படையிலான கடன் வசதிகள் மற்றும் வீடுகளை நிர்மாணிப்பதற்கான தொழினுட்ப ஆலோசனைகளை வழங்குவதுடன் நியாயமான விலையில் கொள்வனவு செய்யக்கூடிய குழுவினரை இலக்காகக் கொண்டு வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான வீடுகளை நிர்மாணிப்பதில் தனியார்துறையின் முதலீட்டினை ஊக்குவிப்பதற்கு சாத்தியமான சூழலை உருவாக்குவதற்கும் கவனம் செலுத்துதல் ஆகும்.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையினால் பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்**

**கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல்**

- 19 கருத்திட்ட முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் 12 மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கும் பிரதிகள் உரிய அமுல்படுத்தும் நிறுவனங்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

**அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் தயாரித்தல்**

- வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் சிறைச்சாலை மறுசீரமைப்புக்கள், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றால் சமர்ப்பிக்கப்பட்ட 04 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் தயாரிக்கப்பட்டன.

**கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் கொள்கைகளிற்கான உரையாடல்கள் ஆகியவற்றில் பங்கு பற்றல்**

- நிரல் அமைச்சுக்களுடனும் மற்றைய உரிய அரசாங்க நிறுவனங்களுடனும் அவற்றினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன் மொழிவுகள் பற்றி கலந்துரையாடுவதற்காக 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

- நிர்மாணக் கைத்தொழில் நிறுவனங்களின் பங்குதாரர்களுடன் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவதற்காக 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டன.

- வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் பங்கு பற்றியமை.

**நீர் வழங்கல் மற்றும் சுத்திகரித்தல்**

பாதுகாப்பான நீர் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளை வழங்குதல் நாட்டிலுள்ள சகல பிரஜைகளின் அடிப்படைத் தேவையாக மட்டுமன்றி நாட்டில் மக்களின் சமூகப் பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதற்குரிய முன் தேவையும் ஆகும்.தேசிய திட்டமிடல் திணைக்களமானது நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் மற்றும் ஏனைய துறை ரீதியிலான அக்கறைதாரர்கள் ஆகியவர்களுடன் இணைந்து

நெருக்கமாகச் செயற்பட்டதுடன் இந்நிறுவனங்களுக்கு கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் மற்றும் துறை ரீதியிலான கொள்கைகளை உருவாக்குவதன் தொடர்பிலான தேவையான கொள்கை உள்ளீடுகள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் துறை அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டமை.

- 17 கருத்திட்ட முன்மொழிவுகள் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெற்றன. அவை ஆராயப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் அனுமதி அளிக்கப்பட்டு மதிப்பீடுகள் தொடர்புடைய நிறுவனங்களான தேசிய வரவு செலவுத்திட்டம், வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் நிரல் அமைச்சுக்கள் ஆகியவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- உரிய நிரல் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.

- 04 Aide Memoires அபிவிருத்தித் திட்டங்களுக்கான கருத்துகளை தயாரித்து வெளிநாட்டு வள திணைக்களத்திற்கு வழங்கியமையுடன் வெளிநாட்டு பணிக்குழுவினால் கோரப்பட்டதற்கு இணங்க நீர் மற்றும் கழிவு நீரத்துறையுடன் தொடர்புடைய விடயங்களை கலந்துரையாடுவதற்கு 05 kick off கூட்டங்கள் திணைக்களத்தில் ஒழுங்கமைத்தமை.

- ஆலோசனைக்குழுக் கூட்டங்கள் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் வெளிநாட்டு பணிக் கூட்டங்கள் உள்ளடங்கலாக சுமார் 20 கூட்டங்களில் கலந்து கொண்டமை.

- திணைக்களத்திற்கு நிரல் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட துறைசார் அபிவிருத்திக்கருத்திட்டங்களிலுள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்குக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- விசேட ஒருங்கிணைக்கப்பட்ட சிங்கராச கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தயாரிப்பதற்குரிய துறைசார் உள்ளீடுகள் வழங்கியதுடன் உதவி செய்தமை.

**சுற்றாடல் முகாமைத்துவம்**

சூழல் முகாமைத்துவமானது உரிய சிறப்பான முதலீடுகளைக் கவர்ந்து துரிதமான பொருளாதார வளர்ச்சிக்கு வசதி அளிப்பதோடு நிலைபேறான அபிவிருத்திக்கு மிகவும் இன்றியமையாததாகும். பசுமை அபிவிருத்தி என்பது சூழல் முகாமைத்துவ கொள்கையின் முக்கியமான ஒரு வசனமாகும். அதாவது மாசற்ற சூழல் மற்றும் நச்சற்ற உணவுப் பழக்கம் என்ற கொள்கையை ஊக்குவிப்பதாகும். சூழல் முகாமை என்ற தொனிப்பொருளின் விடயப் பரப்பானது பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும். சூழல் மாசடைவதைக் கட்டுப்படுத்தல், கழிவுப் பொருட்கள் முகாமை, வனப் பாதுகாப்பு, நிலைபேறான காணி முகாமைத்துவம், வன விலங்குகள் மற்றும் மனிதனின் இருப்பு, உயிரியல் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் நிறுவன ரீதியான மறுசீரமைப்பு என்பனவாகும்.

வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் சனத்தொகையுடன் உணவு, நீர், சக்தி, நிலம் மற்றும் ஏனைய இயற்கை வளங்கள் என்பவற்றிற்கான கேள்வி அதிகரிப்புடன், உலகமானது பசுமையான சுத்தமான மற்றும் நெகிழ்வுத் தன்மையுள்ள அபிவிருத்தியுடனான இலக்கினை அடைவதில் பாரிய சவாலினை எதிர்நோக்குகின்றது. மாறி வரும் காலநிலை மாற்றங்கள் மேலும் சுற்றாடல் சீரழிவிற்கு வழிவகுப்பதுடன் இதன் விளைவாக விசேட சவால் தொகுதியும்

முன்வைக்கப்படுகின்றது. அதிகரித்துக் கொண்டிருக்கும் காலநிலை மாற்றங்களின் தாக்கத்தினால் நிலைதகு அபிவிருத்தியினை சுருக்கமடைய வழிவகுத்தல், வறுமையை வெளிப்படுத்தும் காலப்பகுதி குறைக்கப்படும், மற்றும் சுத்தத்தை முன்னோக்கி நகர்த்தும் தேவை, மிகவும் திறமையான சமமான வளர்ச்சியினைக் கொண்டுள்ள தன்மை ஆகியன காணப்படும். எனவே, சுற்றாடல் துறையானது பொருளாதார வளர்ச்சியின் திருப்புமுனையாகவும் பொருளாதார விஞ்ஞானத்தின் வளர்ந்து வரும் பகுதியாகவும் கருதப்படமுடியும்.

சூழல் துறையானது சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்தி மிகவும் செழிப்பான பல்லுயிர் மற்றும் சுற்றுச் சூழல் சேவைகளை பாதுகாப்பதனூடாக கரிஅமில வாயுவின் தாக்கத்தைக் குறைத்தல் மற்றும் தூய்மையான மற்றும் பசுமையான சூழலைப் பேணுவதை நோக்காகக் கொண்டதாகும். இதன் மூலம் சூழல் தாக்கங்களை குறைத்து நிலைபேறான மற்றும் வினைத்திறனான வள நுகர்வை உறுதிப்படுத்துவதனூடாக மனித நல்வாழ்வை சூழல் தரம் ஆகியவற்றை மேம்படுத்தி இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்தைக் குறைப்பதாகும். சுற்றாடல் முகாமைத்துவமானது நிலைபேறான அபிவிருத்திக்கு இன்றியமையாத அம்சமாகும் என்பது தெட்டத் தெளிவாகும். ஆகவே அபிவிருத்திக்கான திட்டமிடலானது சுற்றுச் சூழல் சமநிலையைப் பேணுவதற்காக உயிரியல் பல்வகைத் தன்மை மற்றும் உயிர் பொருட்களின் பாதுகாப்பு மீது கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும்.

### அனர்த்த முகாமைத்துவம்

பேரழிவுகள் மற்றும் இழப்புக்கள் ஆகியன ஒரு தேசத்தின் பொருளாதார வளர்ச்சியில் பாரிய தடையினை ஏற்படுத்துவனவாகும். அதே நேரம், பேரழிவு நிலைமைகளின் பின்னர் நிவாரணம், இழப்பீடு, புனர்வாழ்வு அல்லது புனரமைப்புத் தேவைகள் ஆகியவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை நுகர்வதுடன் அவை அபிவிருத்திக்கு பயனளிக்கக்கூடியதாக இருப்பதுடன் நீண்ட காலத்திற்கான சமூக முதலீடுகளாகவும் இருக்கும்.

இலங்கையானது பல காலநிலை தொடர்பான அச்சுறுத்தல்களுக்கும் பாதிப்புகளுக்கும் உட்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்தின் காரணமாக இவ் அச்சுறுத்தல்களும் பாதிப்புகளும் மேலும் மோசமடையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையானது மத்தியில் மலைகளைக் கொண்ட ஒரு தீவாகக் காணப்படுவதால் அடிக்கடி வெள்ளப் பெருக்கு, வறட்சி, மண் சரிவு, கடலரிப்பு, சூறாவளி போன்றவற்றுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. காலநிலை மாற்றத்தினால் உந்தப்பட்ட மழைவீழ்ச்சி காரணமாக மிகவும் குறுகிய நேரத்தில் பாரிய அளவான மழை வீழ்ச்சியை கொடுப்பதனால் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் திடீர் வெள்ளப்பெருக்கை ஏற்படுத்துவதோடு வரண்ட காலத்தில் அதிகரித்த வெப்பநிலை காரணமாக நீண்டகால வறட்சியை உருவாக்கும் ஆபத்து காணப்படுகின்றது.

### விசேட நிகழ்வுகள்

- சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றுடன் தொடர்புடைய உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 18 கருத்திட்ட முன் மொழிவுகள் மதிப்பிடப்பட்டன (உ-ம் - காடு மீளுருவாக்கம், கரியமில வாயு (காபன்) தொடர்பான கொள்கை வழிகாட்டல்களை மேம்படுத்துதல், சுத்தமான காற்றின் தரத்தினை மதிப்பிடலும் சுற்றாடல் கொள்கைகளும், முன்னெச்சரிக்கைத் தொழினுட்ப மேம்பாடு, கட்டிடங்கள் சரிவு மற்றும் சேவை நீடிப்பு ஆகியவற்றை மதிப்பிடல்).

- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 10 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.

- வெளிநாட்டு நன்கொடையாளர்களின் தொழினுட்ப உதவிகளின் கீழ் செயற்பட்ட கருத்திட்டங்களுக்கான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.

- உரிய நிரல் அமைச்சுக்களும் நிறுவனங்களும் நாட்டின் அபிவிருத்திக்கான கொள்கைகள் மற்றும் உபாயங்கள் தயாரிப்பதற்குத் தேவையான தொழினுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

## 3.6 சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியம், விளையாட்டு மற்றும் கலாசாரம்

**சுகாதாரத்துறை**

சிறந்த தாய் சேய் நலம், குறைந்த அளவு தொற்று நோய்கள் மற்றும் நீண்ட ஆயுட் காலம் ஆகியவற்றோடு தொடர்புடைய ஆரோக்கியமான விளைவுகளை அடைந்ததில் குறிப்பிடத்தக்க வெற்றி கிடைத்த போதிலும், சுகாதாரத்துறையில் மாறிவரும் நாட்டின் புள்ளிவிபரங்களுக்கும் அதிகரித்து வரும் தொற்றா நோய்கள் தொடர்பாக உயரும் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கும் இலங்கையின் சுகாதார அமைப்பு மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். ஆரோக்கியமான தேசம் ஒன்றானது முக்கியமாக நாட்டின் ஈர்க்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியினை பூர்த்தி செய்யக்கூடிய ஒன்றாகும். எனவே, சுகாதாரத்துறையின் அரச கொள்கை ஆனது தேசிய சுகாதார சேவையை மேம்படுத்தத் தேவையான நிறுவன மற்றும் கொள்கை மறு சீரமைப்புடன் அதிகரிக்கப்பட்ட முதலீடுகளைச் சுகாதாரத்துறைக்கு முதலிடுவதுடன் ஆரோக்கியமான தேசத்தினை உருவாக்குவதனை இலக்காகக் கொண்டுள்ளது. தேசிய திட்டமிடல் திணைக்களமானது 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சுகாதாரத்துறைக்கான கீழ்வரும் பணிகளை நிறைவேற்றியுள்ளது.

- 42 மதிப்பிடப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் செயற்படுத்துவதற்காக சிபார்சு செய்யப்பட்டன. அவதானிப்புகள் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் உரிய நிரல் நிறுவனங்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 06 அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புகள் தயாரிக்கப்பட்டன.

- 2019-2023 ஆண்டுக்காலப்பகுதியில் அமுல் படுத்தப்படவுள்ள ஆரம்ப நிலை சுகாதாரப் பராமரிப்புக் கட்டமைப்புக்கான வலுவூட்டல் கருத்திட்டத்திற்கான செயற்படு திட்டத்தினையும் தயாரிப்பதற்கானதும் குறிகாட்டிகளை இனங்காண்பதற்கானதுமான தேவையான உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

- சுகாதாரத்துறைக்கான வெளிநாட்டு நிதி உதவித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு உரிய நிதி உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக பல கூட்டங்கள் நடாத்தப்பட்டு உலக சுகாதார நிறுவனம், உலக வங்கி, KOICA, JICA ஆகியவற்றின் அதிகாரிகளுக்கு அவதானிப்புக்கள் மற்றும் உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

- ஆரம்ப நிலை சுகாதாரப் பராமரிப்புக் கொள்கையினை தயாரிப்பதற்கான சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சுக்கு தேவையான உள்ளீடுகள் வழங்கப்பட்டன

- தேசிய திட்டமிடல் திணைக்களமானது “இலங்கையின் போசாக்கிற்கான அரசாங்கத்தின் செலவினது மீள்பார்வை” என்பதன் செயற்படு குழுவிற்கு

அரசாங்கத்தின் ஒருங்கிணைக்கும் பகுதியாகச் செயற்பட்டது. தேசிய திட்டமிடல் திணைக்களமானது இவ் மீளாய்வு நோக்கத்திற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் கூட்டம் ஒன்றினை பல அக்கறைதாரர்களுடன் 5 ஆம் திகதி ஐப்பசி மாதம் 2018 ஆம் ஆண்டு மிலோதாவில் ஒழுங்கு படுத்தியதுடன் அதன் தொடர்ச்சியாக வேலைக்குழுவின் அங்கத்தவர்களுடன் 12.12.2018 இல் சினமன் கிரான்ட் விடுதியில் தொழினுட்பக் கூட்டம் நடாத்தப்பட்டது.

### விளையாட்டுத்துறை

அரசாங்கமானது 2018ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்தல், விளையாட்டு மைதானங்களை நிர்மாணித்தல் போன்றன உள்ளடங்கலாக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலை நோக்காகக் கொண்டு விளையாட்டுத்துறையில் முதலிட்டது. அதே போன்று தொற்றா நோயைக் குறைப்பதன் ஊடாக அரசாங்கம் அதற்காக ஏற்கும் செலவினைக் குறைப்பதும் இந்நாட்டின் சமூகத்தினதும் பண்பாட்டினதும் கட்டாயத் துறையொன்றாக இத்துறையினை நடாத்திச் செல்லுதல் மற்றும் ஆரோக்கியமான தேசத்தினரை உருவாக்கி அவர்களைப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செலுத்த வைப்பதனையும் நோக்காகக் கொண்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் கீழ்வரும் பணிகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- 02 கருத்திட்ட முன் மொழிவுகள் மதிப்பிடப்பட்டதுடன் செயற்படுத்துவதற்காக தேவையான நிதியினைப் பெறுவதற்கான பரிந்துரைகள் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் ஆகியவற்றிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

- விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் உரிய நிறுவனங்களுடனும் பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017-2020 இற்றைப்படுத்துவதற்குரிய கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### சமயம், கலாசாம் மற்றும் பாரம்பரியம், தேசிய நல்லிணக்கம், கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் துறை

புத்த சாசன மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,தேசிய சகவாழ்வு, அரச கரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மீள் குடியேற்றம், புனர் நிர்மாணம் மற்றும் அமைச்சு, சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு, தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, அரசாங்க தொழில் முயற்சிகள் அபிவிருத்தி, மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி ஆகியன இத்துறையின் கீழ் கருதப்படுகின்றன. இத்துறையினால் உள்ளடக்கப்படும் விடயப்பரப்புகளாக பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் மற்றும் முஸ்லிம் சமயம், கலாசாரம், பாரம்பரியம், தேசிய ஆவணக் காப்பகங்கள், தேசிய தொல்பொருட் காட்சியகங்கள், அரச கரும மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகிய உள்ளன.

**2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மேற்படி துறைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.**

- 2018 ஆம் ஆண்டினுள் 20 கருத்திட்ட முன்மொழிவுகள் பரிந்துரை செய்யப்பட்டன.

- தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சில் நடைபெற்ற குழுக்கூட்டத்தில் பங்கு பற்றியமை.

### 3.7 கல்வி, உயர் கல்வி, திறன் அபிவிருத்தி, தகவல் தொடர்பாடல் மற்றும் விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் ஆராய்ச்சி

**கல்வித்துறை**

2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கல்வித்துறையின் தரம், சமத்துவம் மற்றும் பொருத்தமான தன்மை ஆகியவற்றினை உறுதி செய்யும் வகையில் கணிசமான அளவு கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மூலோபாயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. தேவையான மனித வளங்களை உருவாக்கல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி உள்ளடங்கலாக தேவையான மேம்பாடுகளை பாடசாலைக்கல்விக் கட்டமைப்பிற்குள் உருவாக்குவதற்கு ஏதுவான புதிய கொள்கைச் சீர்திருத்தங்களான 13 வருடக் கட்டாயக் கல்வி, அண்மைய பாடசாலையே சிறந்த பாடசாலை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக சகல பாடசாலைகளிலும் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு அபிவிருத்திகளான குடிநீர் வசதி, சுகாதார வசதிகள் வகுப்பறைகள், பரிசோதனைக்கூடங்கள் மற்றும் பரிசோதனைக்கூட உபகரணங்கள் ஆகியவற்றிற்கு ஏதுவான கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

**பூரணப்படுத்தப்பட்ட பணிகள்**

- கல்வி அமைச்சுடனும் ஏனைய தொடர்புடைய அக்கறைதாரர்களுடனும் நடாத்தப்பட்ட பொதுக்கல்வித்துறையினை முன்னேற்றிச் செல்வதற்குரிய கலந்துரையாடல்களில் உயிர்ப்புடன் பங்குபற்றியமையும் கல்விச்சீர்திருத்தங்களை முன்மொழிந்தமையும்.

- வழிகாட்டல் குழுக்கூட்டங்களில் பங்குபற்றியமை மற்றும் கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அறிவின் மையத்தின் அடித்தளமாக பாடசாலைக்கல்வி முறைமையினை மாற்றி அமைக்கும் முறைமைக் கருத்திட்டம் ஆகியவற்றிற்கான குழுக்கூட்டங்களினை ஏற்பாடு செய்ததுடன் பங்குபற்றியமை.

- அமைச்சுக்களினாலும் நிரல் நிறுவனங்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட புதிய கருத்திட்ட முன்மொழிவுகளுடன் தொடர்புடைய கருத்திட்ட இருப்பு புத்தாக்கம் செய்யப்பட்டது.

- கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 11 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் தயாரிக்கப்பட்டன.

- கல்வித்துறையில் 9 புதிய கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் மதிப்பிடப்பட்டன.

## உயர் கல்வித்துறை

பல்கலைக்கழகங்களில் புதிய பீடங்கள் விசேடமாக க.பொ.த. (உ/த) இல் தொழில்நுட்டப பிரிவில் பயிலும் மாணவர்களுக்கான உயர்கல்வி வசதிகளிற்கான தொழினுட்ப பீடங்கள் திறக்கப்பட்டமை மற்றும் அரச பல்கலைக்கழகங்களில் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான எண்ணிக்கையை அதிகரித்தமை ஆகியவற்றின் மூலம் 2017 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் உயர்கல்வித்துறையானது விரிவாக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக புதிய கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் நடைமுறையிலுள்ள பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நவீனமயப்படுத்தல் ஆகியவற்றின் மூலம் பட்டதாரிகளின் வேலை வாய்ப்பினை மேம்படுத்துவதற்கு கூடுதலான உந்துதல் அளிக்கப்பட்டது. மேலும் பல பல்கலைக்கழகங்கள் அவற்றுக்குள்ளேயே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை ஊக்கமளிப்பதற்கான வசதிகளை அமைப்பதுடன் கைத்தொழில்களுடன் இணைப்பினை ஏற்படுத்துவதற்கான முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டன.

2018 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களை அமைப்பதற்கான பல நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டதுடன் இந்நிறுவனங்களை விரிவாக்குவதன் மூலம் நாட்டிலுள்ள மாணவர்களுக்கு உயர்கல்விக் கிடைப்பனவு விரிவாக்கப்பட்டது.

### பூரணப்படுத்தப்பட்ட பணிகள்

- அரச பல்கலைக்கழகங்களிற்கு அனுமதி பெற இயலாத அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி வாய்ப்புக்களை பெறுகின்ற மாணவர்களிற்கான கடன் திட்டத்தினை வழங்குவதற்காகவும் கலந்துரையாடல்களில் கூட்டங்களில் பங்குபற்றியமை.
- வழிகாட்டல் குழுக்கூட்டங்களை ஒழுங்கமைத்து பங்குபற்றியமை மற்றும் பாரிய உயர்கல்வித் துறைக்கான வெளிநாட்டு நிதி உதவிக் கருத்திட்டங்களிற்கான குழுக்கூட்டங்களில் பங்குபற்றியமை.
- உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய கருத்திட்ட முன்மொழிவுகளுடன் தொடர்புடைய கருத்திட்ட இருப்பு புத்தாக்கம் செய்யப்பட்டது.
- உயர் கல்வித்துறையில் 33 புதிய கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் மதிப்பிடப்பட்டன.

## திறன் கல்வி மற்றும் இளைஞர் அலுவல்கள்

பொருளாதார வளர்ச்சியின் காரணமாக புதிதாக உருவாகி வரும் தொழிற் சந்தைக் கேள்வியை பூர்த்தி செய்வதற்கு உயர் திறன் கொண்ட தொழிற் படையென்பது இன்றியமையாததாகும். எனவே, அரசாங்கமானது சுமார் 250,000 திறன் கொண்ட இளைஞர்களை வருடாந்தம் பயிற்றுவிப்பதன் மூலம் 2020 ஆம் ஆண்டளவில் 175,000 தேசிய தொழிற் சான்றிதழ் பெற்றவர்களை உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளது. மேலும் இதனை உருவாக்குவதற்குரிய கொள்கைப் போக்கானது உருவாக்கப்படும் இலங்கையின் ஒவ்வொரு திறனாளியும் அவர்களது திறமைகள், மென் திறன்கள், செலவிடும் தன்மை மற்றும் தரமான தொழிற்கல்வியின் அடைதல் ஆகியவற்றை முன்னேறச்செய்யும் பொழுது உலகப் பொருளாதாரத்தில் முழுமையான தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளும் திறமையினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும்.

2018 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்ட பணிகள்

- முழுவதுமாக 11 கருத்திட்ட முன்மொழிவுகள் திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அபிவிருத்தி ஆகிய துறைகளில்கிடைக்கப்பெற்றதுடன் அவை யாவும் மதிப்பிடப்பட்டு மதிப்பீட்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டன. தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் தொடர்புடைய நிரல் நிறுவனங்களிற்கு அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

- தொழிற் கல்வி நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் அபிவிருத்திப்பங்குதாரர்கள் ஆகியோருடன் பல்வேறு கூட்டங்கள், கருத்திட்டங்களை தயாரிக்கும் விடயங்கள் மற்றும் கருத்திட்ட முன்மொழிவுகளின் தேவையான தகவல்கள் முன்வைப்பதற்கான கலந்துரையாடல்கள் ஆகியன நடாத்தப்பட்டன. அதே போல் கருத்திட்டங்களை முன்னுரிமைப்படுத்துதல் மற்றும் துறைக்கான பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை தயாரித்தல் ஆகியவற்றிற்கான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

- புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட கருத்திட்ட சமர்ப்பிப்பு படிவத்தின் கீழ் திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் ஆகிய துறைகளில் கருத்திட்டங்களை உருவாக்குவது தொடர்பாக பல்வேறு கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன.

- இதற்கு மேலதிகமாக,விசேடமாக பாடசாலை இடைவிலகல் மாணவர்களினை உள்வாங்குவதற்கான தொழிற்கல்விப்பயிற்சியினை அதிகரிப்பது பிரதானமாக வலியுறுத்தப்பட்டதுடன் 13 வருட கட்டாயக்கல்விக் கொள்கையுடன் இணைந்ததான தொழிற்கல்விப்பயிற்சியின் தரம் அதிகரிக்கப்பட்டது.

- தொழிற்கல்விப் பயிற்சிக்கான அரச முதலீட்டுத் திட்டம் மற்றும் துறைக்கான எதிர்கால போக்கு என்பன தயாரிக்கப்பட்டன.

- திறன் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான அமைச்சுக்களிற்கிடையிலான கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அபிவிருத்தி அமைச்சின் திறன் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான கருத்திட்ட கண்காணிப்பு பிரிவுடன் தொடர்புடைய அதிகாரிகளுடன் பிரச்சினைகள் மற்றும் தீர்வுகளிற்கான பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

தகவல் மற்றும் தொடர்பாடல் துறை

தகவல் மற்றும் தொடர்பாடல் துறையானது தகவல் தொழினுட்பம் (IT), தபால் மற்றும் தொலைத் தொடர்பு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. தகவல் தொழினுட்பமானது வருமானம் உழைக்கும் கைத்தொழில்களான தகவல் தொழினுட்ப சேவை வழங்கல்கள் (ITES), தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம் / வியாபாரச் செயற்பாடுகள் வெளியார் சேவைகள் (ICT/BPO) மற்றும் அறிவுசார் (தொழில்வல்லமை) செயற்பாடுகளிற்கு வெளியார் சேவைகளைப் பெறல் (ICT/KPO) போன்ற துறைகளையும் உள்ளடக்கியதாகும்.

அரசாங்கமானது தகவல் தொழினுட்பம் மற்றும் தொழினுட்பத்துறையை பிரதானமாக அறிவுடன் தொடர்புபட்ட துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதில் அரசாங்கமானது உயர் முன்னுரிமை அளித்துள்ளதுடன் தகவல் மற்றும் தகவல் தொடர்புக்கான நுழைவு, இலத்திரனியல் அரச செயற்பாடு மற்றும் சீராக்கல் வசதிகள் என்பவற்றை முன்னேற்றுகின்ற அதேவேளை இலங்கையில் தனியார் துறையானது தகவல் தொழினுட்ப சேவைகளை வழங்குதல் மற்றும் உரிய உட்கட்டமைப்பு

வசதிகளை சர்வதேச மட்டத்திற்கு தரமுயர்த்துவதனை நோக்காகக் கொண்டுள்ளது. 2018ஆம் ஆண்டில் இத்துறையில் மிகவும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களாக வலைத்தளங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் இணையங்களில் அதிகரித்து வரும் குற்றங்களைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகள் ஆகியன காணப்படுகின்றன.

**நிறைவேற்றப்பட்ட பணிகள்**

- உரிய அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 15 புதிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- தகவல் மற்றும் தொடர்பாடல், தபால் மற்றும் பொது சன ஊடகம் ஆகிய துறைகளிற்கான கருத்திட்ட இருப்பு தயாரிக்கப்பட்டது.
- தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சு, தபால் சேவைகள் அமைச்சு, தகவல் தொடர்பு மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் மற்றும் கொள்கைப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டன. அவ்வாறே 03 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்திற்கான துறைக் குறிப்பும் முதலீட்டு அட்டவணையும் தயாரிக்கப்பட்டன.
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத் துறைக்கான குழுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்தமையும் பங்குபற்றியமையும்.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தில் தரவு முகாமைத்துவ கட்டமைப்பிற்கான கருத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான முன்மொழிவுகளைத் தயாரித்தல், அனுமதி அளித்தல், தர வரிசை நுழைவுத்தரத்தினை உருவாக்குதல் மற்றும் மென்பொருளை ஆரம்பிப்பதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப நிறுவனத்திற்குமிடையேயான ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தியமை.

**விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் ஆராய்ச்சி**

அரசின் பிரதான இலக்குகளில் ஒன்றாக தொழினுட்பம் மற்றும் ஆராய்ச்சித்துறையினை உலகளாவிய தரத்திற்கு அபிவிருத்தி செய்தல் காணப்படுகின்றது. ஒரு நாட்டின் துரித பொருளாதார அபிவிருத்திக்கு உயர் தொழினுட்ப கைத்தொழில் மயமாக்கல் முன் நிற்கின்றது. அரசானது நாட்டிலுள்ள உயர் தொழினுட்ப கைத்தொழில்களை அதன் தரம், உற்பத்தித்திறன் மற்றும் உள்ளூர் நிறுவனங்களுடனான போட்டித்தன்மை ஆகியவற்றை முன்னேற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அபிவருத்தி மற்றும் ஆராய்ச்சித்துறை ஆனது நனோ தொழினுட்பம், நுண்ணுயிர் தொழினுட்பம் உள்ளடங்கலாக உயர் தொழினுட்பத் துறையில் பல கைத்தொழில்கள் உணவு பதப்படுத்துதல், திசு வளர்ப்பு மற்றும் பசளை போன்றவற்றின் பெறுமதி அதிகரிக்கப்பட்டுள்ளது.

**பூரணப்படுத்தப்பட்ட பணிகள்**

- 11 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பிடப்பட்டதுடன் பரிந்துரைகள் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் உரிய நிரல் நிறுவனங்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- விஞ்ஞானம், தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சில் நடைபெற்ற கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்வதற்குரிய கலந்துரையாடல்களில் பங்குபற்றியமை.

- பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சினால் அனுப்பப்பட்ட ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்பத்துறையினை அடிப்படையாகக் கொண்ட முன்மொழிவுகளின் வினைத்திறனை அபிவிருத்தி செய்வதற்கான பல கலந்துரையாடல்களை நடாத்தியமை.
- முன்னுரிமை மற்றும் கண்டு பிடிப்புஆகியவற்றில் அரச சேவையின் சிறப்பு எனும் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றியதுடன் சிறந்த சேவைக்கான விருதும் வழங்கப்பட்டது.

3.8 பிராந்திய அபிவிருத்தி மற்றும் சமூக பாதுகாப்பு

பிராந்திய அபிவிருத்தி

பிராந்திய அபிவிருத்தித் துறையின் கொள்கை மூலக்கூறானது பிராந்தியத்தில் சாத்தியமானவற்றை இனங்காணல், பிராந்தியங்களிற்குரிய வளங்களின் தனித்துவம் மற்றும் வேறுபட்டதன்மை ஆகியவற்றினால் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் கௌரவமான நிலையினை அடையச் செய்தல் ஆகும். இத்துறையானது சகல துறைகளிலும் செல்வாக்கு செலுத்துவதனால் ஏனைய தேசிய மட்ட அபிவிருத்தி முன்னெடுப்புகளுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது.

நாட்டின் அபிவிருத்தியில் பிராந்திய மட்டத்தில் பெறக்கூடிய வளங்களின் நிலைதகு பயன்பாட்டின் முக்கியத்துவம் பிராந்திய அபிவிருத்தித்துறையில் காணப்படும் சிறப்பம்சமாகும். தற்போதைய பொருளாதார வளர்ச்சி, மனித வள அபிவிருத்தி மற்றும் சமூக குறிகாட்டிகள் மற்றும் ஒன்பது மாகாணங்களினதும் அவற்றின் அண்மைய போக்குகளில் காணப்படும் பிரச்சினைகள், இடைவெளிகள் மற்றும் சவால்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வுகள் செய்யப்படுவதுடன் பிராந்திய அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஐந்து பிராந்திய அபிவிருத்தி அமைச்சுக்களின் ஊடாகவே மிகக் கூடுதலான பிராந்திய அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

பிராந்திய சமமின்மையானது முக்கியமான பிரச்சினையாக விளங்குவதனால் அதனை மிகவும் நெருங்கிய தொடர்புடைய வாழ்க்கைத்தரம், மனிதவளச்சுட்டிகள், விவசாய மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் ஆகியவற்றுடன் வெளிப்படுத்தப்பட வேண்டும். சுதந்திரத்திற்கு பின்னரான காலப்பகுதியில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால் இதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. துரித மகாவலி அபிவிருத்தித்திட்டம், மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள், மாகாண சபைகளை உருவாக்குதல், கம் உதாவ, ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித்திட்டம், பிராந்திய பொருளாதார முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டம், கிராம எழுச்சி (கம நெகும) மற்றும் நகர எழுச்சி (புர நெகும) ஆகியன சில பாரிய முக்கிய முன்னெடுப்புக்கள் நாட்டின் இந்த பிரச்சினைக்காக செயற்படுத்தப்பட்டன. அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைக்கூற்றும் இப்பிரச்சினைக்கு முன்னுரிமை அளித்தது.

விசேட நிகழ்வுகள்

- உரிய நிரல் அமைச்சுக்களினால் மேலனுப்பட்ட 14 கருத்திட்ட முன் மொழிவுகள் மதிப்பிடப்பட்டதுடன் 03 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் இற்றைப்படுத்தப்பட்டது.
- அவதானிப்புக்கள் தேசிய வரவு செலவுத்திட்டம், வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் உரிய நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- “விசேட ஒருங்கிணைக்கப்பட்ட சிங்கராச கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2018 - 2020” தயாரிக்கப்பட்டது.

- வயம்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணக்கம் தெரிவித்தமை.
- தென் பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணக்கம் தெரிவித்தமை.
- உலக வங்கி உள்நாட்டு அபிவிருத்தி ஆதரவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**சமூக பாதுகாப்புத்துறை**

அரசானது முழுச் சமூகப்பாதுகாப்புத்துறையினதும் ஒருமைப்படுத்தப்பட்ட மூலோபாயத்தினை உருவாக்குவதற்கும் குறிப்பிட்டசமூக பாதுகாப்புத் திட்டங்களான சகல உதவி தேவைப்படும் சமூகத்தின் ஒரு பிரிவினராகிய பிள்ளைகள், பெண்கள், முதியவர்கள் மற்றும் அங்கவீனமுற்றோர் ஆகியோரின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதுடன் அவர்களை வலுவூட்டி நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கச் செய்வதற்காக தனது முழுத்திறனையும் பயன்படுத்துகின்றது. நிரல் அமைச்சுக்களாக ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு,மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு ஆகியன பிரதான அமைச்சுக்கள், நலிவுற்ற பிரிவினராக பிள்ளைகள், பாதிக்கப்பட்ட பெண்கள், முதியவர்கள் மற்றும் அங்கவீனமுற்றோர் ஆகியோர் உள்ளடங்கலாக அவர்களின் நல்வாழ்வினை உறுதிப்படுத்துவதற்குரிய பொறுப்புக்களைக் கொண்டுள்ளது.

**பூரணப்படுத்தப்பட்ட பணிகள்**

- **கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரித்தலும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் சமர்ப்பித்தலும்**

நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 70 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் உரிய அமைச்சுக்களினால் தயாரிக்கப்பட்ட 18 அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புக்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

- **கொள்கைகளை உருவாக்கமும் மீள்பார்வையும் -**

கீழ்வரும் கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

- குடும்பக் கொள்கை
- முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக் கொள்கை
- பகல் நேரப் பராமரிப்புக் கொள்கை

- **"தேசிய பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை தடுப்பதற்கான ஆய்வு" இற்கான அவதானிப்புகள் வழங்கியமை –**

ஐக்கிய நாடுகள் தொகை மதிப்புநிதியமானது (UNFPA)" பெண்களின் நலங்கள் ஆய்வுகள் - 2018" எனும் தலைப்பில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளின் கீழ் ஆய்வினை நடாத்துவதற்கு திட்டமிட்டதுடன் திணைக்களம் அதற்கான அவதானிப்புகள் வழங்கியமை.

- **முதியோர் பராமரிப்பு வலையமைப்பினை அபிவிருத்தி செய்வதற்கான உதவியமை –**

  திணைக்களமானது முதியோர் பராமரிப்பு வலையமைப்பினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன் விசேடமாக வலையமைப்பினை அமைப்பதற்குரிய தொழினுட்ப உதவி வழங்கியமை.

- **இலங்கையின் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி மாநாட்டிற்கான தொழினுட்ப பயிற்சிப் பட்டறையை நடாத்தியமை –**

  ஐக்கிய நாடுகள் சிறுவர்கள் நிதியமும் (UNICEF) தேசிய திட்டமிடற் திணைக்களமும் இணைந்து அரசாங்கமும் அரசாங்கமல்லாத பங்காளர்களும் ஒருமித்து முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கு முதலிடுவதற்கு முன்னுரிமை அளிப்பதற்கும் தேசிய வரவு செலவுத்திட்டம் 2019இன் ஊடாக அதனைச் செயற்படுத்துவதற்கும் தொழினுட்ப வேலைப்பட்டறை ஒழுங்கமைக்கப்பட்டது.

- **“மூளைசாளிகளைக் கட்டியெழுப்பலும் எதிர்காலத்தினைக் கட்டியெழுப்பலும் இலங்கையின் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான உயர்மட்டக் கூட்டம்” இனை நடாத்தியமை –**

  தேசிய திட்டமிடல் திணைக்களமானது ஐக்கிய நாடுகள் சிறுவர்கள் நிதியத்தின் (UNICEF) உதவியுடன்இளம்பிள்ளைகளின் சுகாதாரம், கல்வி மற்றும் பாதுகாப்புத் தேவைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி தேசிய வரவு செலவுத்திட்டம் 2019இல் முன்னுரிமைப்படுத்தப்பட்ட முதலீடுகள் இனங்காணப்பட்டன. இம்முன்னுரிமைகள் மேற்படி உயர் மட்டக் கூட்டத்தில் நிதி அமைச்சருக்கு அவரின் கவனத்தில் கொண்டு வருவதற்காக வெளியிடப்பட்டன.

- **“விசேட கருத்திட்டங்களின் தற்போதைய நிலைமை” இற்கான அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டது–**

  குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் வெவ்வேறு அமைச்சுக்களினால் அமுல் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் விசேட கருத்திட்டங்களின் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய அறிக்கை கௌரவ பிரதம மந்திரி அவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டது.

- **தேசிய சமூகப்பாதுகாப்பு மூலோபாயத்தினை உருவாக்குவதற்கான ஆலோசனை நிறுவனத்தினை வாடகைக்கு அமர்த்துவதற்கான பெறுகை நடைமுறைகள் நடாத்தப்பட்டதுடன் ஆலோசனை நிறுவனத்திற்கு ஒப்பந்தமும் வழங்கப்பட்டது –**

  தேசிய சமூகப்பாதுகாப்பு மூலோபாயத்தினை மேம்படுத்துவதற்கு எவரேனும் ஆய்வுகள் செய்யும் போது தேசிய திட்டமிடற் திணைக்களமானது பொறுப்பான நிறுவனமாகும். சமூக பாதுகாப்பு வலைக் கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவுடன் இணைந்து பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி சமூகப்பாதுகாப்பு மூலோபாயத்தினை உருவாக்குவதற்குத் தேவையான தொழினுட்ப உதவிகள் பெற்றுக் கொள்ளப்பட்டது.

- **“இலங்கையில் பிள்ளைப் பராமரிப்பு வசதிகளை விரிவாக்குவதனைப் பரீட்சித்து பார்ப்பதற்கான குழுவின் பரிந்துரைகள்” இன் குழு அறிக்கையினை தயாரித்தமை –**

  இல.17/2289/706/112 உம் 25.10.2017ஆம் திகதியும் கொண்டதான “பிள்ளைப் பராமரிப்பு வசதிகளை விரிவாக்குதலும் மேம்படுத்தலும்” ஆகிய கௌரவ தேசிய கொள்கைகள்

மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத் தீர்மானத்திற்கமைவாக, இலங்கையில் பிள்ளைப் பராமரிப்பு வசதிகளை விரிவாக்குவதனை பரீட்சித்து பார்ப்பதற்காக, உரிய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களை பிரதிநிதிப்படுத்தும் குழுவினை நியமித்து அதனை வழிநடாத்திச் சென்று அமைச்சரவை அமைச்சர்களுக்கு பரிந்துரைகள் சமர்ப்பிப்பதற்கான அனுமதியினை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினை வழங்கப்பட்டது.அதற்கிணங்க, மேற்படி அறிக்கை தயாரிக்கப்பட்டு அமைச்சரவை அமைச்சர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக மேலனுப்பப்பட்டது.

- **தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பிரதிநிதியாக கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் ஆகியவற்றில் பங்கு பற்றியமை -**

  இத்துறையுடன் தொடர்புபட்ட பல்வேறு நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் ஆகியவற்றில் பங்குபற்றி சமூக பாதுகாப்புத் துறையின் முன்னேற்றத்திற்கு தேவையான உள்ளீடுகள் வழங்கப்பட்டன

## 3.9 பொது முகாமைத்துவம் மற்றும் ஆட்சி

நாட்டில் மேம்பட்ட நல்லாட்சி நிறுவப்படுவதற்கு அரசாங்கமானது ஒருங்கிணைந்த தொழினுட்பம், புதுமையான மற்றும் நல்ல ஆட்சி சார்ந்த அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட சட்டம் ஒழுங்கமைக்கப்பட்ட ஆட்சியில் மக்கள் நட்பு அரச சேவை,ஊழல் மற்றும் ஜனநாயகச் சுதந்திரங்களைக் கருத்தில் கொண்டு அதிகரிக்கப்பட்ட பொதுமக்களின் பங்கு பற்றலுடனான நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணிக்கின்றது.

வினைத்திறனுடையதும் பயனுள்ளதுமான அரச சேவைகளை வழங்குவதற்கு, நாட்டின் பொது நிர்வாகத் துறையானது நிறுவன ரீதியிலான, மனித வளங்கள் மற்றும் உற்பத்தியுடனான சேவை வழங்குதல் என்பன தொடர்ந்தும் மேம்படுத்தப்படல் முக்கியமாகும். அரசானது அபிவிருத்தி நடவடிக்கைகளில் தனியார் துறை ஈடுபடுவதற்கு அரச துறையானது குறிப்பிடத்தக்க அளவில் வசதியளிப்பதனை அங்கீகரிக்கின்றது. எனவே மனித மற்றும் மூலதன வளங்களின் இயலளவை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துதல் மிகவும் முக்கியமானதாகும்.

இத்திணைக்களத்தில் பொது நிர்வாகத்துறைஐந்து முக்கிய பிரிவுகளான பொது நிர்வாகம், தேசிய பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் ஆகியன உள்ளடங்கலாக அரசுடன் தொடர்புபட்ட விசேட நிறுவனங்களான ஜனாதிபதி செயலகம், பிரதம மந்திரி செயலகம் மற்றும் பாராளுமன்றம் ஆகியனவும் காணப்படுகின்றன. தேசிய திட்டமிடல் திணைக்களமானது பொது முகாமைத்துவத் துறையின் மேம்பாட்டிற்கு பின்வரும் வகையில் 2018 ஆம் வருடம் பங்களிப்புச் செய்துள்ளது.

- 83 கருத்திட்ட முன்மொழிவுகளிற்கு செயற்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதுடன் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு பரிந்துரைக் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

- பொது நிர்வாக முகாமைத்துவ பிரிவுடன் தொடர்புடைய பல்வேறு அமைச்சுக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற 11 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்குரிய அவதானிப்புகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- இத்துறையுடன் தொடர்புபட்ட பல்வேறு நிறுவனங்களினாலும் ஒழுங்கு செய்யப்பட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள்

ஆகியவற்றில் பங்குபற்றி பொது நிர்வாகத்துறையின் முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்டது.

- உரிய அமைச்சுக்களிற்கு ஏற்ற கொள்கைகள், உபாயங்கள் உருவாக்குவதற்குரிய தொழினுட்ப உள்ளீடுகள் வழங்கப்பட்டன.
- அரச துறையின் வினைத்திறன் எனும் கருத்திட்டத்திற்குரிய செயற்பாடுகளை தீரமானிப்பதற்கு உரிய நிறுவனங்களுடன் பல கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன.
- பொ.மு.தி (2018-2021)இற்கு ஆட்சி எனும் துறைக்கான அத்தியாயமும் முதலீட்டு அட்டவணைகளும் தயாரிக்கப்பட்டன.

### 3.10 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம்

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் சகல தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு சம்பந்தமான முகாமைப்படுத்துவதற்குரிய தொழினுட்ப உதவிகள் வழங்கப்பட்டன. சகல தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காகவும் 290 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன (பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 10 மில்லியன் ரூபாய்கள்). இத்திணைக்களத்தினால் 2018 புரட்டாதி 30ஆம் திகதியில் 278,770,881 ரூபாய்கள் பெறுமதியான 1806 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

## 4. தகவல் அபிவிருத்திக்கான மத்திய நிலையம்

தகவல் அபிவிருத்திக்கான மத்திய நிலையம், விசேட நூலகம் ஆகவும் பொருளாதாரம் மற்றும் தொடர்புடைய விடயங்களிற்கான ஆவணப்படுத்தப்பட்ட தகவல் நிலையம் ஆகவும் இயங்குகின்றது. இது நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு மற்றும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு ஆகிய அமைச்சுக்களினதும் அவற்றின் கீழ் வரும் சகல திணைக்களங்களினதும் தொழில் ரீதியிலான உத்தியோகத்தர்களிற்கும் தேவையான தகவல்களை வழங்குகின்றது. இது மேலும் வெளி ஆய்வாளர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோருக்கும் தேவையான தகவல்களை வழங்குகின்றது.

### நூலகத்தின் ஒழுங்கமைப்பு

- உள்வரும் நூல்களை பெற்றுக்கொள்ளலும் வகைப்படுத்தலும்.
- பருவகால இதழ்களிற்குரிய பகுதியினை புத்தாக்கம் செய்தல்.
- நூல்கள் பாவனையாளர்களிற்கு பாவனைக்கு கிடைப்பதற்கு முன்பு அவற்றை செயன்முறைக்கு உட்படுத்துதல்.

### பகிர்வு, விசாரணை மற்றும் உசாத்துணை சேவைகள்

- தகவல் தேவைகளிற்காக விசாரணைகளில் கவனம் செலுத்துதல்.

- கணினித் தகவல் அடிப்படையில் விசாரணைகளிற்கு அவசியமான உசாத்துணை நூல்களைப் பெற்றுக் கொடுத்தல்.

- நூல்கள் பகிர்வுக்கு கணினி மயப்படுத்தப்பட்ட முறைமை ஒன்றை அபிவிருத்தி செய்துபராமரித்தல்.

- பாவனையாளர்களின் தேவைக்கு ஏற்ப செய்திகள் மற்றும் கட்டுரைகளை பிரதி செய்து இலத்திரனியல் ஆவணங்களாக வழங்குதல்.

**ஏனைய சேவைகள்**

- நூலகத்தின் சேகரிப்புக்களான டிஜிட்டல் மயப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட தகவல் சேவைகளின் நிலைபேற்றினைப் பாதுகாப்பதற்காக ஆதரவினையும் பராமரிப்பினையும் கொண்டதுமான ஒப்பந்தம் இரு பகுதியினரான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் சஞ்ஜே (தனியார்) நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர் ஆகியவர்களுக்கிடையில் 14ஆம் திகதி மார்கழி மாதம் 2018ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது.

- ஒருங்கிணைக்கப்பட்ட பருவ காலப்பட்டியல்கள் புதுப்பிக்கப்பட்டதுடன் பராமரிக்கப்பட்டது.

- தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் தேசிய நூலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஏனைய பங்கு பற்றல்வலையமைப்புகளுக்கு உட்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளைப் பயன்படுத்தி நுழைவுகள் தயாரிக்கப்பட்டன.

- இலத்திரனியல் தகவல் ஊடகங்களின் அடிப்படையில் நூலகங்களிற்கிடையிலான கடன்கள் பராமரிக்கப்பட்டன.

## 5. மனிதவள அபிவிருத்தி மற்றும் பொது நிர்வாகம்

**31.12.2018இல் திணைக்களத்தின் ஆளணி**

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. எஸ்.எஸ். முதலிகே | பணிப்பாளர் நாயகம் |
| 2 | திரு. கே.டீ.எஸ்.ஆர். பெரேரா | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 3 | திருமதி. சீ.எஸ். பெரேரா | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 4 | திருமதி. ஜே.எஸ்.எஸ்.ரூபசிங்க | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 5 | திருமதி. எம். கங்காதரன் | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 6 | திருமதி. எஸ்.டீ. ரத்னாயக்க | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 7 | செல்வி. என். விஜேவீர | பணிப்பாளர்(நிதி) |
| 8 | திருமதி. டபிள்யு.ஏ.எம். மல்காந்தி | பணிப்பாளர் |
| 9 | திருமதி. சீ. சேனாநாயக்க | பணிப்பாளர் |
| 10 | திரு. யூ. என். மல்லவாராச்சி | பணிப்பாளர் |
| 11 | திரு. ரி.ஏ.டீ.டீ. பிரேமரத்ன | பணிப்பாளர் |
| 12 | திரு. ரி.எம்.ஜே. பண்டார | பணிப்பாளர் |
| 13 | திரு. எம்.எப்.ஏ முபாரக் | பணிப்பாளர் |
| 14 | திரு. ஏ.ஆர். விக்கிரமரத்ன | பணிப்பாளர் |
| 15 | செல்வி. ஏ.கே. குணசேகர | பணிப்பாளர் |

| | | |
|---|---|---|
| 16 | திருமதி. பீ.எச். சந்திமா | பணிப்பாளர் |
| 17 | திருமதி. டீ.ஏ. நிஹுரேபொல | உதவிப் பணிப்பாளர் |
| 18 | திரு. பீ.எம்.எஸ். ஜயதிலக்க | உதவிப் பணிப்பாளர் |
| 19 | திரு. கே.என்.பீ. ஜயரத்ன | உதவிப் பணிப்பாளர் |
| 20 | திரு. ரி.எம்.டீ.பீ. தென்னகோன் | உதவிப் பணிப்பாளர் |
| 21 | திருமதி. டபிள்யு.எல்.பீ. பெனான்டோ | உதவிப் பணிப்பாளர் |
| 22 | திருமதி. ஆர்.கே.எல். ஜாகொட | உதவிப் பணிப்பாளர் |
| 23 | திருமதி. ரி.வை.எல். முனசிங்ஹ | உதவிப் பணிப்பாளர் |
| 24 | திரு. ஆர்.டீ.ஏ. மைத்ரீரத்ன | உதவிப் பணிப்பாளர் |
| 25 | திருமதி. எம்.ஏ.ஜீ. துசாரி | உதவிப் பணிப்பாளர் |
| 26 | திருமதி. டீ.ஏ.சீ.டீ. பீரிஸ் | உதவிப் பணிப்பாளர் |
| 27 | திருமதி. டபிள்யு.ஏ.ஜே.சீ. விக்ரமாராச்சி | உதவிப் பணிப்பாளர் |
| 28 | திருமதி. ஏ. லக்ஸ்மன் | உதவிப் பணிப்பாளர் |
| 29 | திருமதி. டீ.ஏ. மனோரத்ன | உதவிப் பணிப்பாளர் |
| 30 | திருமதி. டபிள்யு.ஏ. வல்பிட்ட | உதவிப் பணிப்பாளர் |
| 31 | திருமதி. டீ.எச்.ஆர்.டீ. விஜேவர்தன | உதவிப் பணிப்பாளர் |
| 32 | திரு. கே.ஜீ.ஆர்.ஜீ.ஆர். விக்ரமவர்தன | உதவிப் பணிப்பாளர் |
| 33 | திருமதி. ஜ.ரி.என். மென்டிஸ் | உதவிப் பணிப்பாளர் |
| 34 | திருமதி. எச்.டீ.என்.கே. ஹெட்டியாராச்சி | உதவிப் பணிப்பாளர் |
| 35 | திருமதி. கே.ஏ.எச்.கே. பெரேரா | உதவிப் பணிப்பாளர் |
| 36 | திருமதி. எஸ்.எம்.டீ.டீ. சமரக்கோன் | உதவிப் பணிப்பாளர் |
| 37 | திருமதி. டபிள்யு.எம். ஹன்சனி | உதவிப் பணிப்பாளர் |
| 38 | திரு. கே.பீ.எஸ்.எஸ். பெனான்டோ | உதவிப் பணிப்பாளர் |
| 39 | திரு. கே.ஏ.எம்.பி. சந்திரபால | உதவிப் பணிப்பாளர் |
| 40 | திருமதி.எச்.ஜீ.பீ.கே.ரி. குணவர்தன | உதவிப் பணிப்பாளர் |
| 41 | திருமதி. ஏச்.கே.டீ.சீ. தாமரசி | உதவிப் பணிப்பாளர் |
| 42 | திருமதி. .ஜீ.ஆர்.எஸ்.எஸ். திலகரத்ன | உதவிப் பணிப்பாளர் |
| 43 | திருமதி. யூ.ஏ டபிள்யு.எல். சுமனசேகர | உதவிப் பணிப்பாளர் |
| 44 | செல்வி. பீ.ஏ.என். அபேசேகர | உதவிப் பணிப்பாளர் |
| 45 | திருமதி. எம்.ஏ.எஸ். தாபரேரா | உதவிப் பணிப்பாளர் |
| 46 | திருமதி.ஏ.பீ.எஸ்.டிலூசா | உதவிப் பணிப்பாளர் |
| 47 | திருமதி.ஏ.வை.எச்.அனுருத்தா | உதவிப் பணிப்பாளர் |
| 48 | திருமதி. எஸ்.ஏ.ஜீ.சீ. ஜயசேகர | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 49 | செல்வி. ஜி. ரத்னாவலி | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 50 | திருமதி. எஸ்.பி. சமரசேகர | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 51 | திருமதி. கே.ஜீ.பீ. தமயந்தி | முகாமைத்துவ உதவியாளர் I |
| 52 | திருமதி. ஜே.ஏ.டீ.சீ.எஸ். ஜயக்கொடி | முகாமைத்துவ உதவியாளர் I |
| 53 | திருமதி. ஏ.டீ.என். பிரியதர்சனி | முகாமைத்துவ உதவியாளர் I |
| 54 | செல்வி. வை.ஜீ.எஸ். பிரியதர்சனி | முகாமைத்துவ உதவியாளர் I |
| 55 | திருமதி. ஏ.டீ.என். மெலனி | முகாமைத்துவ உதவியாளர் II |
| 56 | திருமதி. என்.யீ. லியனகே | முகாமைத்துவ உதவியாளர் II |
| 57 | திரு. பீ.டபிள்யு.என்.எஸ். பதிராஜா | முகாமைத்துவ உதவியாளர் III |
| 58 | திரு. யீ.ஏ.சீ.எஸ். எதிரிசிங்க | முகாமைத்துவ உதவியாளர் III |
| 59 | செல்வி. ஜே.ஏ.எஸ். டீல்சானி | முகாமைத்துவ உதவியாளர் III |
| 60 | திரு. டீ.டி.சீ.உதார | முகாமைத்துவ உதவியாளர் III |
| 61 | திரு. கே.வி.டி.ஏ.பி கரவிட்ட | சாரதி I |

| | | |
|---|---|---|
| 62 | திரு. ஏ.எம். லலித் டீபால் | சாரதி I |
| 63 | திரு. பீ.எஸ். ஆனந்த | சாரதி I |
| 64 | திரு. ஆர்.ஏ.ஆனந்த பெரேரா | சாரதி I |
| 65 | திரு. எஸ் ஜயசூரியர் | சாரதி II |
| 66 | திரு. சுனில் லியனாராச்சி | சாரதி II |
| 67 | திரு. ஜே.ஜீ.யூ. விமலசிரி | சாரதி II |
| 68 | திரு. டீ.பீ. திஸாநாயக்க | சாரதி II |
| 69 | திரு. யீ.ஏ.எஸ்.எஸ். எதிரிசிங்க | சாரதி II |
| 70 | திரு.யு.கே.டீ.நஜித் ஜீவந்த | சாரதி II |
| 71 | திரு. டீ.ஜீ.பீ சமந்த | சாரதி III |
| 72 | திரு. டபிள்யு.ஏ.சீ. வீரசிங்க | சாரதி III |
| 73 | திரு.எச்.ஏ.ஐ.என். ஹெட்டியாராச்சி | சாரதி III |
| 74 | திரு. எச்.பீ டீ.ஏ. பட்டகொட | சாரதி III |
| 75 | திரு. பீ. தர்மசிறி | காரியாலய உதவியாளர் (விசேட வகுப்பு) |
| 76 | திரு. நிமல்.இரஞ்சித். ஹெட்டியாராச்சி | காரியாலய உதவியாளர் (விசேட வகுப்பு) |
| 77 | திரு. யூ.யூ. ரத்னகுமார டீ சில்வா | காரியாலய உதவியாளர் (விசேட வகுப்பு) |
| 78 | திரு. டபிள்யு. என். போத்தேஜு | காரியாலய உதவியாளர் (விசேட வகுப்பு) |
| 79 | திரு. எம். எல். ஏ. சமன் நலின் | காரியாலய உதவியாளர் I |
| 80 | திரு. பீ.எஸ். அஜித் | காரியாலய உதவியாளர் I |
| 81 | திரு. எம்.பீ.ஆர். ரத்னாயக்க | காரியாலய உதவியாளர் I |
| 82 | திரு. எம். சந்தன பிரதீப் | காரியாலய உதவியாளர் II |
| 83 | திரு. ஜே.எம். தனுஷ்க நயனஸ்ரீ குணபால | காரியாலய உதவியாளர் III |
| 84 | திரு. எம். ஹரித பிரபாஷ் பெரேரா | காரியாலய உதவியாளர் III |
| 85 | செல்வி. எஸ். ஏ. டீ சதுரிக்கா செவ்வந்தி | காரியாலய உதவியாளர் III |

2018 ஆம் ஆண்டில் திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்ற ஆளணி

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. பீ.எம்.எம். குணரத்ன | பணிப்பாளர் |
| 2 | திருமதி. ரி. பிரசாந்த் | பணிப்பாளர் |
| 3 | செல்வி. கே.எல்.டபிள்யு.சீ.எல். டீ சில்வா | முகாமைத்துவ உதவியாளர் I |
| 4 | திரு. பீ.எஸ்.ஆர். பீரிஸ் | முகாமைத்துவ உதவியாளர் III |
| 5 | திரு. எச்.பீ.ஆர் சமரசிங்க | சாரதி I |
| 6 | திரு. டபிள்யு.எம்.என். கருணாதிலக்க | சாரதி II |
| 7 | திரு. எம். எல். ஏ. சமன் நலின் | காரியாலய உதவியாளர் I |
| 8 | திரு. என்.எஸ்.யூ.கே. சில்வா | காரியாலய உதவியாளர் I |

2018 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆளணி

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திருமதி. ஜே.எஸ்.எஸ்.ரூபசிங்க | மேலதிகப் பணிப்பாளர் நாயகம |
| 2 | திருமதி. டபிள்யு.ஏ.எம். மல்காந்தி | பணிப்பாளர் |
| 3 | திருமதி.ஏ.பீ.எஸ்.டிலூசா | உதவிப் பணிப்பாளர் |
| 4 | திருமதி.ஏ.வை.எச்.அனுருத்தா | உதவிப் பணிப்பாளர் |
| 5 | திரு. எம். எல். ஏ. சமன் நலின் | காரியாலய உதவியாளர் I |
| 6 | திரு. ஆர்.ஏ.ஆனந்த பெரேரா | சாரதி I |
| 7 | திரு.யு.கே.டீ.நஜித் ஜீவந்த | சாரதி II |
| 8 | திரு. டபிள்யு.ஏ.சீ. வீரசிங்க | சாரதி III |
| 9 | திரு.எச்.ஏ.ஐ.என். ஹெட்டியாராச்சி | சாரதி III |
| 10 | திரு. எச்.பீ டீ.ஏ. பட்டகொட | சாரதி III |

2018 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு புதிதாக நியமனம் பெற்ற ஆளணி

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | செல்வி. ஜே.ஏ.எஸ். டீல்சானி | முகாமைத்துவ உதவியாளர் III |
| 2 | திரு. டீ.டி.சீ.உதார | முகாமைத்துவ உதவியாளர் III |
| 3 | திரு. ஜே.எம். தனுஷ்க நயனஸ்ரீ குணபால | காரியாலய உதவியாளர்III |
| 4 | திரு. எம். ஹரித பிரபாஷ் பெரேரா | காரியாலய உதவியாளர்III |
| 5 | செல்வி. எஸ். ஏ. டீ சதுரிக்கா செவ்வந்தி | காரியாலய உதவியாளர்III |

2018 ஆம் ஆண்டில் திணைக்களத்திலிருந்து ஓய்வு பெற்ற ஆளணி

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | திருமதி. எம்.டீ. சந்திரா | முகாமைத்துவ உதவியாளர் I |

வெளிநாட்டுப் பயிற்சிகள் 2018

| இல | பெயரும் பதவியும் | பயிற்சி | வெளிநாடு | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| 01 | திரு. எஸ். எஸ். முதலிகே<br>பணிப்பாளர் நாயகம் | SASEC Nodal Officials and Working Group Meeting | சிங்கப்பூர் | 05-06 பங்குனி 2018 |
| | | Annual Country Consultation with Asian Development Bank Visit Sri Lanka Delegation | பிலிப்பைன்ஸ் | 22-23 பங்குனி 2018 |
| | | 51$^{st}$ ADB Annual Meeting | பிலிப்பைன்ஸ் | 03-06 வைகாசி 2018 |
| | | Ministerial Seminar on financial strategy for Development Countries 2018 | சீனா | 11-17 ஆனி 2018 |
| | | Engaging Civil Society Organizations in the Sustainable Development Goals | ஜப்பான் | 24-29 புரட்டாதி 2018 |

| | | | | |
|---|---|---|---|---|
| 02 | திருமதி. எம். கங்காதரன்<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | UNESCAP Gender Policy – Data Initiative: Inception Workshop<br>"Consultation with Senior Government Officials on ADB's Strategy 2030-Aligned Corporate Results Framework" | பாங்கொக்<br>பாங்கொக், தாய்லாந்து | 21-23 சித்திரை 2018<br>28 புரட்டாதி 2018 |
| 03 | திருமதி. எஸ்.டீ. ரத்னாயக்க<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | Inter – Agency Social Protection Assessment (ISPA) Tools Training<br>CPT Good Agricultural Practieeces (GAP) Strategies for Sri Lanka<br>Developing Effective Responses and Long –Term Care Systems | இந்தோனேசியா<br>தாய்லாந்து<br>ஜப்பான் | 12 - 16 பங்குனி 2018<br>20 - 26 வைகாசி 2018<br>05 - 07 மார்கழி 2018 |
| 04 | திரு. கே.டீ.எஸ்.ஆர். பெரேரா<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | "SAARC Development Fund's (SDF) Partnership Conclave 2018" Regional Integration Through Project collaboration and investment | இந்தியா | 01-05 ஆடி 2018 |
| 05 | திருமதி. ஜே.எஸ்.எஸ். ரூபசிங்க<br>மேலதிகப்பணிப்பாளர் நாயகம் | 2018 Seminar on "China experience – China Social System and Public Policy" | சீனா | 02-17 ஆடி 2018 |
| 06 | திருமதி. சீ.எஸ். பெரேரா<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | Official Delegation to South Africa Partnership Conclave 2018 Regional Integration Through Project collaboration and investment | தென் ஆபிரிக்கா | 23-25 ஆடி 2018 |
| 07 | திரு. ஏ.ஆர். விக்கிரமரத்ன<br>பணிப்பாளர் | SASEC Sub regional Workshop on Sanitary-Phyto sanitary and Technical Barriers to Trade National and Regional Diagnostic Studies,<br>CPT Good Agricultural Practices (GAP) Strategies for Sri Lanka | புது டில்லி இந்தியா<br>தாய்லாந்து | 11-13 சித்திரை 2018<br>20 – 26 வைகாசி 2018 |
| 08 | திரு. ரி.ஏ.டீ.டீ. பிரேமரத்ன<br>பணிப்பாளர் | 5th Asia Pacific Forum on Sustainable Development: Transformation towards Sustainable Development and resilient societies | பாங்கொக் | 28 - 30 பங்குனி 2018 |
| 09 | திரு. எம்.எப்.ஏ முபாரக்<br>பணிப்பாளர் | City Resilience Programme<br>Smart City Forum World Congress / City Solution Forum | தாய்லாந்து<br>பார்செலோனா, ஸ்பெயின் | 08-14 ஆடி 2018<br>13–15 கார்த்திகை 2018 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | திரு. ரி.எம்.ஜே. பண்டார<br>பணிப்பாளர் | 74th Session of the Economic and Social Commission for Asia and the Pacific (ESCAP)<br>Asia Pacific Regional Early Childhood Development Conference<br>Social Protection Study Visit | பாங்கொக்<br>நேபாளம்<br>பிலிப்பைன்ஸ் | 11 - 16 வைகாசி 2018<br>05-07 ஆனி 2018<br>28 - 31 ஆவணி 2018 |
| 11 | செல்வி. ஏ.கே. குணசேகர பணிப்பாளர் | Asian Development Bank's Inter-Sub regional Knowledge-Sharing Forum on Enhanced Implementation of the World Trade Organization Trade Facilitation Agreement | தாய்லாந்து | 30 - 31 ஐப்பசி 2018 |
| 12 | திருமதி. சீ. சேனாநாயக்க பணிப்பாளர் | Bi-regional Workshop | வியட்னாம் | 24 - 29 ஆனி 2018 |
| 13 | செல்வி. என். விஜேவீர பணிப்பாளர் (நிதி) | Conducting Standardizing Oversight Over Workplace Safety | சீனா | 10 - 23 ஆனி 2018 |
| 14 | திருமதி. எஸ்.எம்.டீ.டீ. சமரக்கோன்<br>உதவிப் பணிப்பாளர் | Seminar on Economic Policies & Economic Affairs | ஜப்பான் | 14 வைகாசி– 08 ஆனி 2018 |
| 15 | திரு. பீ.எம்.எஸ். ஜயதிலக்க<br>உதவிப் பணிப்பாளர் | Climate Resilience Improvement Project (CRIP) | மெக்சிகோ | 14 - 18 வைகாசி 2018 |
| 16 | திருமதி. எச்.டீ.என்.கே. ஹெட்டியாராச்சி<br>உதவிப் பணிப்பாளர் | JICA Knowledge Co-Creation Program<br>Strengthening Social Health Protection Towards Universal health Coverage<br>Overweight and Obesity in Asia and the Pacific | ஜப்பான்<br>பிலிப்பைன்ஸ் | 15 – 26 தை 2018<br>13 – 18 ஆடி 2018 |
| 17 | திருமதி.எச்.ஜீ.பீ. கே.ரி. குணவர்தன<br>உதவிப் பணிப்பாளர் | CPT Good Agricultural Practices (GAP) Strategies for Sri Lanka | தாய்லாந்து | 20-26 வைகாசி 2018 |
| 18 | திருமதி அகல்யா லக்ஸ்மன்<br>உதவிப் பணிப்பாளர் | Training Course on Financial Programming and Policies | இந்தியா | 16-27 சித்திரை 2018 |
| 19 | திருமதி கே.ஏ.எச்.கே. பெரேரா<br>உதவிப் பணிப்பாளர் | Smart Nation: Strategy to Implementation | சிங்கப்பூர் | 26 – 27 கார்த்திகை 2018 |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | திரு. ஆர்.டீ.ஏ. மைத்ரீரத்ன உதவிப் பணிப்பாளர் | 1st University – Industry Linkages Visit ADB and Peking University Knowledge Partnership Event | பீஜிங் | 02-07 மார்கழி 2018 |
| 21 | திருமதி. ஆன் தாபேர உதவிப் பணிப்பாளர் | ADB Scholarship (Masters) | ஜப்பான் | சித்திரை 2018 - பங்குனி 2020 |
| 22 | திருமதி டபிள்யு. ஏ. ஹன்சனி உதவிப் பணிப்பாளர் | Comprehensive Urban Transportation Planning | ஜப்பான் | 12 கார்த்திகை 15 மார்கழி 2018 |
| 23 | திருமதி. டீ.ஏ. மனோரத்ன உதவிப் பணிப்பாளர் | 5th Regional Training Course on the National Strategy for the Development of Statistics (NSDS) and Advanced Data Planning Tool (ADAPT) | ஜப்பான் | 06 - 09 கார்த்திகை 2018 |
| 24 | திரு. ரி.எம்.டீ.பீ. தென்னகோன் உதவிப் பணிப்பாளர் | South Asia Capacity Building Program on Successful project Design and Implementation for Executing/Implementing Agencies | பங்களாதேஷ் | 31 ஆடி - 02ஆவணி 2018 |
| 25 | திருமதி திலினி மென்டிஸ் உதவிப் பணிப்பாளர் | South Asia Forum on the Sustainable Development Goals | இந்தியா | 04 – 05 ஐப்பசி 2018 |
| 26 | திருமதி. எம்.ஏ.ஜீ. துசாரி உதவிப் பணிப்பாளர் | Social Protection Study Visit | பிலிப்பைன்ஸ் | 28– 31 ஆவணி 2017 |
| 27 | திருமதி.டபிள்யு. .ஏ. வல்பிட்ட உதவிப் பணிப்பாளர் | PHD | ஜப்பான் | 01.04.2018-31.03.2021 |
| 28 | திரு. கே.ஜீ.ஆர்.ஜீ.ஆர். விக்ரமவர்தன உதவிப் பணிப்பாளர் | Study for the Masters of Economic Policy | அவுஸ்திரேலியா | 01.08.2018 - 31.12.2019 |
| 29 | செல்வி. பீ.ஏ.என். அபேசேகர உதவிப் பணிப்பாளர் | Study for the Masters of Economic Policy | அவுஸ்திரேலியா | 12.06.2018 - 31.12.2020 |

## 6. நிதிச் செயலாற்றுகை – 2018

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நிதி அறிக்கைகளின் படி, கணக்காய்வாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய மொத்தச் செலவுகள், நடைமுறை மற்றும் மூலதனச் செலவுகள் ஆகியன சாராம்சப்படுத்திக் கீழே தரப்பட்டுள்ளன.

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | உப கருத் திட் டம் | **2017** | | | **2018** | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்த ஒதுக்கீடு (ரூபாய்.) | உண்மையான செலவு (ரூபாய்.) | செலவின் சதவீதம் (%) | மொத்த ஒதுக்கீடு (ரூபாய்.) | உண்மையான செலவு (ரூபாய்.) | செலவின் சதவீதம் (%) |
| | | | | | | | |
| நடைமுறை | | 85,222,000 | 82,820,601 | 97.18 | 97,000,000 | 88,462,086 | 91.20 |
| மூலதனம் | | 10,223,000 | 6,273,910 | 61.37 | 12,000,000 | 6,523,012 | 54.36 |
| **உப மொத்தம்** | | **95,445,000** | **89,094,511** | **93.35** | **109,000,000** | **94,985,098** | **87.14** |
| **மூலதனம்** (PPPF) வெளிநாட்டுக்கடன் (12) (PPPF) உள்ளூர் நிதி(17) | 17 | - | - | - | 100,000,000<br>2,000,000 | 25,713,327<br>1,375,948 | 25.71<br>68.80 |
| **உப மொத்தம்** | | | | | **102,000,000** | **27,089,275** | **26.56** |
| | | | | | | | |
| மொத்தம் | | **95,445,000** | **89,094,511** | **93.35** | **211,000,000** | **122,074,374** | **57.86** |